தினில், காற்று நிரம்பியத் துவாரங்களையுடைய மூங்கில்கள் இனிதாய் இசைந்தொலித்தவண்ணமிருக்க, இசைக் கருவிகளுக்கிசைந்தவாறு இராகங்களைப் பாடுந் திறமை பொருந்திய கின்னரஸ்திரீகள்[1] சிவபெருமானின் த்ரிபுரவிஜயத்தைக் கானம் செய்து கொண்டிருக்க,[2] அக்காலை நினது கம்பீர முழக்கமும் குகைகளின் எதிரொலியுடன் மிருதங்கத்தொனி போலக் கிளம்புமாயின், பரமேச்வரனுக்கு அப்பொழுது ஸங்கீதப்ரஸங்கம் ஸகல அங்கங்களுடனுமமைந்து நன்கு நிறைவேறியதாகுமன்றோ? 50 - 56.

“இமகிரியின் சாரலில் வியப்புறத் தகும் அந்தந்த விசேஷங்களனைத்தையும் கண்ணுற்ற வண்ணம் கடந்தேகி, பரசுராமனது பெரும் புகழைப் பரப்புவதற்குப் பாதையாயுளதும், அன்னப்பறவைகள் புகுந்தேகுவதற்குப் பொருந்திய வாயிலாயிருப்பதுமான **கிரௌஞ்ச பர்வதத்தின்** யாதொரு துவாரமுண்டோ,[3] அதனால்,

---

1. கின்னரஸ்திரீகள் = ஒரு வித தேவஜாதிஸ்திரீகள்.

2. மஹேச்வரன், மூவுலகின் நன்மையை நாடி, பொன் வெள்ளி செம்பு என்னும் மூன்று உலோகங்களாலாகிய மூன்று பட்டணங்களில் வஸித்த அஸுரரையும் அந் நகரங்களையும் நெற்றிக் கண்ணிலிருந்துண்டான நெருப்பினால் நாசமாக்கிய வரலாற்றைப் பாட்டாக இயற்றி, கானம் செய்கின்றனர்; எனப் பொருள்.

3. முன்னால் பரசுராமன், பரமசிவனிடம் தனுர்வேதத்தைக் கற்று வருங்கால், சுப்பிரம்மணியனுக்கும் தமக்கும் நேரிட்ட பெரும் போட்டியில், தமது பாணங்களை யெய்து, கிரௌஞ்சபர்வதத்திற் பெரியதோர் துவாரத்தை உண்டாக்கினார் எனவும், அத் துவாரத்தின் வழியாய் ஹம்ஸங்கள் மானஸஸரஸிற்கும் பாரததேயத்திற்கும் போக்குவரத்து செய்கின்றன எனவும் கூறப் படுகிறது.

பலிசக்கிரவர்த்தியை அடக்க முயன்ற ஸ்ரீமஹாவிஷ்ணுவின் நீலநிறமாய் நீண்டுவளர்ந்த திருவடிபோல்[1] நீயும் உனதுடலைச் சீராகக் குறுக்காய் நீட்டிக்கொண்டு, உட்புகுந்து, மீண்டும் வெளிக் கிளம்பி வடதிசை நோக்கிச் செல்லவேண்டும். 57.

" நீ, கிரௌஞ்சத் துவாரத்தைக் கடந்து வானத்திலெழும்பிச் சென்று, இராவணனது புயங்களால் ஆட்டங்கொண்ட அடிவாரத்தின் ஸந்திபந்தங்களையுடையதும்,[2] தேவமாதுகளுக்குக் கண்ணாடியா யிருப்பதுமான கைலாஸகிரிக்கு அதிதியாகப் போகக் கடவாய்; அக் கைலையோ, தினந்தோறும் திரள் திரளாகக் குவிந்து வளர்ந்துருவமெடுத்த முக்கண்ணனது அட்டஹாஸம்[3] போன்றதாய், ஆம்பல்மலர்களுக்கேற்ப

1. முன்பு, திருமால் த்ரிவிக்ரமாவதாரமெடுத்து மூவுலகையும் அளக்க முயல்கையில், தமது திருவடியை மிகவும் நீட்டியது போல், மேகமும் தனதுடலை கிரௌஞ்சத் துவாரத்தின் அளவுக்குத் தகுந்தவாறு நீட்டிக்கொண்டு, உட்புகுந்தேகி மறுபடியும் வெளியில் வந்து இயற்கையுருவத்தை யடையுமாறு கூறுகிறான்.

2. இராவணன், தன் புயபலத்தினால் இறுமாப்புற்றவனாய், ஒருகால் கைலையைக் கைகளாலாட்டிப் பெயர்த்தெடுக்க, அப்பொழுது அம் மலையின் அதிர்ச்சியால் பார்வதீ முதலியவர் பயந்துவிட, அது கண்டு சிவபெருமான் தமது திருவடி விரலால் அம் மலையை அழுத்த, அதினால் அவனது புயங்களனைத்தும் நசுக்குண்டு, அவன் அநேக நாள் கூக்குரலிட்டுத் துதி செய்ய, ஈசன் மனம் பிரஸன்னமாய் அவனை விடுவித்தன ரென்று புராணகதை.

3. அட்டஹாஸம் = பெருஞ் சிரிப்பு. [பிரளயகால முதலியவற்றில் சிவன் மிகவும் அதிகமாய்ச் சிரித்துக் கூத்தாடுவதாகப் பிரஸித்தி. சிரிப்பை வெளுப்பாக வர்ணிப்பது கவிகளின் முறை.]

வெண்ணிறங்கொண்டு மிகவு முயர்வுற்ற அதன் கொடுமுடிகளால் ஆகாயத்தை யளாவி நிற்கின்றது. பிளவுற்ற நீலாஞ்ஜனச் சிலையின் உட்புற நிறத்திற்கு நிகராகக் கறுநிறம் பெற்றுத் தூலக்கங்கொண்ட நீ யானையினது தந்தத்தின் அப்பொழுதே அறுபட்ட முனைபோல் அதிகமாய வெளுத்திருக்கும் அக் கைலை மலையின் சாரலைச் சார்ந்திருக்குங்கால், அப் பர்வதம், நீலவஸ்திரத்தைத் தோள்தனிலணிந்த பலபத்திரனுக் கொப்பான சீர்மையை யடைந்து,[1] வியப்புடன் இமைகளசையாமற் காணக் கூடிய காந்திவிசேஷத்தைப் பெறப்போகின்றதெனக் கருதுகின்றேன். பார்வதியானவள், தன் க்ரீடாபர்வதமான அக் கைலையிற் சிவபெருமானால், அரவமயமான கங்கணங்களைத் தனது கரத்திலிருந்து விலக்கிக்[2] கைலாகு கொடுக்கப் பெற்றவளாய்க் கால்நடையாகவே ஸஞ்சரிப்பளேயாயின், அப்பொழுது நீ முன் சென்று, நினதுடலுக்குள் தண்ணீர்த்திரளை அசையவிடாது இறுகச் செய்து கொண்டு,[3] உனது அங்கங்களை அடுக்கடுக்காக அணிவகுத்து, அப் பார்வதி மணிமயமான மலைத் தடத்தில்

---

1. பலராமன் நீலவஸ்திரம் தரித்ததாகக் கூறப்படுகிறது.

2. ஸர்ப்பமய ஆபரணங்களை விலக்குவது, பார்வதி பயமுறாமலிருப்பதின் பொருட்டே. [சிவன் ஸர்ப்பங்களைப் பூணாக அணிந்திருப்பதாகப் பிரஸித்தி.]

3. பாதங்களை வைத்து மிதித் தேறுகையில், உள்ளடங்கிய ஜலம் வெளியிற் சிதறியோடாமலிருக்க, இறுகச் செய்து கொள்ளவேண்டுமெனக் கூறுகிறான். [பார்வதி பாதங்களை ஸுகமாய் வைத்து எளிதில் ஏறக் கூடியவாறு, உடலை மெத்தையைப் போலவும் அடுக்கடுக்காகவும் ஆக்கிக்கொள்—என்று வல்லபதேவனுடைய வியாக்கியானப் படி பாடம்.]

ஏறுவதற்கேற்ற படிக்கட்டாகச் செய்திடுவாயாக. அக் கைலையங் கிரியில், தைவலோகத்து மங்கையர், தமது கங்கணங்களிலிழைத்துள்ள வைரமணிகளின் கூர்மையுள்ள முனைகளைக் கொண்டு உன்றனைத் தாக்குங்கால், நீ தண்ணீரை நன்குப் பொழிந்திடுவாயாதலின், அவர்கள் நீராடுமகத்தில் நின்றனை நீர்சொரியும் கருவியாக நிச்சயமாய் ஆக்கிக் கொள்வர்; எனது நண்பனே! அந் நங்கையர், வெயிலின் வெப்பத்தினால்[1] வருந்துங்கால், அவரது கைகளிற் சிக்கிய நீ, மீண்டும் அம் மாதுகளிடமிருந்து மீட்சி பெற முடியாமற் போயின், விளையாட்டிலாவலுறுமியல்பினரான அப் பெண்களைக் காதுகளுக்குக் கடுந்துன்பமளிக்கும் கர்ஜனைகளால் விரட்டி விடவேண்டும். எனது அன்பார்ந்த அம்புதமே! நீ, மானஸப் பொய்கையின், பொற்பங்கயங்களைப் பிறப்பிக்குந் தன்மையதான தண்ணீரைப் பருகியும், யதேச்சையாய் ஐராவதமென்னும் குஞ்ஜரத்திற்கு நொடிப் பொழுது முகத்திலணியும் ஆடையாகவிருந்தும், உன்றனால் உண்டாக்கப்படும் காற்றுகளால் கற்பகவிருக்ஷங்களின் பட்டுத்துகில்போன்ற தளிர்களைக் குலுங்கச் செய்தும், இன்னும் இவ்வாறு ஸரஸமான வெவ்வேறு விநோதச் செயல்களைச் செய்துகொண்டும், அம் மாமலையில் இஷ்டப்படி இன்பமனுபவிப்பாயாக.* 58 - 62.

---

1. ஸ்வர்க்கலோகஸுகத்தை அனுபவிப்பவர்களுக்கு வெயில் முதலியவற்றின் கொடுமை நேரிடவேண்டிய அவசியமில்லையானதால், 'வெயிலின் வெப்பம்' எனப் பொருள் கூறுவது தகாதெனவும், 'மன்மததாபத்தினால் வருந்துங்கால்' என்று கூறுவதே சான்றுமெனவும் பூர்ணஸரஸ்வதியின் வியாக்கியானம்.

'இச்சைக் கிசைந்தவண்ணம் எல்லாவிடத்திற்கும் ஏகுமியல்புடைய நீ, நாயகனது மடிபோன்ற அம்மலையின் மேற் றடத்திலிருப்பதும், சிறிது நழுவிய வெண்பட்டாடைக் கொப்பான கங்காநதியினால் சூழப்பெற்றதும், அப் பர்வதத்தின் ப்ரியதமையெனத் தகுந்ததுமான பட்டணத்தைக் கண்டு, அதை அளகாபுரி யென்றறியாம லிருக்கமாட்டாய்;[1] அந் நகரமானது, மாரிகாலங்களில் மழை பொழியும் மேகத்திரளை மிகவுமுயரமான ஏழுப்பரிகையுள்ள மாளிகைகளாகும் முடிதனில் தாங்குவதால், அஃது, முத்துக் கோவைகளை முன்னெற்றிமயிர்களிலணிந்த மாதரசியைப் போல் விளங்கும்.[2] 63.

---

1. முன்பு 6 வது பத்தியத்திற் கூறியவாறு, மேகமானது மகேந்திரனது மாற்றுருவங்க ளெடுக்கவல்ல அதிகாரபுருடனா யிருப்பதாலும், யதேச்சையாய் எங்குஞ் செல்லக் கூடிய திறமை வாய்ந்தது பற்றியும், இதற்குமுன் கூட, அஃது அளகாபுரியை நன்கறிந்திருக்கும் என்கிற கருத்துடன் நிச்சயமாய்க் கூறினன்.

2. 'மார்க்கமனைத்தையும் முதலில் நான் சொல்லக் கேள்' என்று முற் கூறியபடி, மார்க்கமனைத்தும் மொழியப்பெற்றதாதலால் இத்துடன் முதல் ஆச்வாஸத்தை முடித்து, 'நாயகனின் மடியில் நன்கலங்கரித்த ப்ரியதமையைப் போல்' என்று அளகாபுரியை வர்ணிக்கும் பாவனையாக, யக்ஷனுக்கு அவனது மனைவியுடன் இறுதியிற் சேர்க்கையுண்டாய், அவன் இன்புறப் போகும் மங்களகரமான விஷயம் காளிதாஸமஹாகவியினால் ஸூசிப்பிக்கப்பட்டதென்றறிக.

ஸ்ரீ:

இரண்டாம் ஆச்வாஸம்

“அம் மாநகரத்தின்கண் மிக வடிவழகு வாய்ந்த மங்கையரையுடையனவும், சித்திரங்களாற் சிறப்புற்றனவும், ஸங்கீதப் பிரஸங்கத்தில் அடிக்கப்படும் மிருதங்கத் தொனிகளைப் பெற்றவையும், மணிமயமான நிலங்களுடன் கூடியனவும், ஆகாயத்தை யளாவிய முனைகளையுடையவையுமான மாடிமாளிகைகள்,—மின்னற்கொடிகளைப் பெற்றதும், இந்திரதனுஸ்ஸுடன் கூடியதும், செவிகளுக் கின்பமாக கம்பீரமாய் முழங்குவதும், உடலுக்குள் தளதளப்பான தண்ணீரைத் தாங்கியதும், மிகவும் உயரத்திலிருப்பதுமான நின்றனக்கு முறையே அந்தந்த விசேஷங்களால் நிகராகக் கூடியன.[1] அவ்வளகாபுரியிலுள்ள அங்கனைகள், கரந்தனில் விநோதமாய்க் கமலமலரையும், முன்னெற்றி மயிர்களிற் குருக்கத்திப் பூவையும், சீரான முகத்தினில் வெள்ளிலோத்திமலர்ப் பொடியாலாகிய வெண்ணிறத்தையும், மயிர்முடியில் மாசற்ற மருதோன்றி மலரையும், காதுகளிற் கோமளமான காட்டுவாகைப்

---

1. மங்கையர் மின்னற் கொடிகளுக்கும், சித்திரங்கள் இந்திரதனுஸ்ஸுக்கும், மிருதங்கத் தொனிகள் இடி முழக்கங்களுக்கும், மணிமய நிலங்கள் தளதளப்பான தண்ணீருக்கும், உன்னதம் உயர்வுக்கும் முறையே தகுந்த உவமைகளாம்.

பூவையும், தலைமயிரின் வகுடுதனில் நினது வரவால் விகஸித்த கடப்பம்பூவையும் அனவரதமும் அணிந்திருப்பர்.[1] ஆங்கு, யக்ஷர்கள், ஒளிவீசும் தாரகை முதலியவற்றின் பிரதிபிம்பங்களாகும் புஷ்பங்களால்[2] அலங்கரிக்கப் பெற்றப் படிகமணிமயமான உப்பரிகைகளின்கண் பெண்மணிகளுடன் ஏறிச் சென்று,—நீ கம்பீரமாய் முழங்குவதுபோல் மெல்லென ஒலிக்குமாறு மிருதங்கங்கள் அடிக்கப் படுங்கால்—கற்பகவிருக்ஷங்களில் உற்பத்தியாய் மிகவு மின்ப மளிக்கவல்லதான மதுவை[3] ஆதரவுடன் அருந்துகின்றனர். அந் நகரத்தில், கோவைப்பழம் போன்ற உதடுகளையுடைய ஸுந்தரிகளின் கணவர், அவரது

---

1. சரத்ருதுவில் தாமரையும், ஹேமந்தருதுவில் குருக்கத்தியும், சிசிரருதுவில் வெள்ளிலோத்தியும், வஸந்தருதுவில் மருதோன்றியும், கிரீஷ்மருதுவில் காட்டுவாகையும், வருஷருதுவில் கடம்பும் முறையே மலருமாதலால், அந் நகரத்தில் ஆறு ருதுக்களில உண்டாகும் புஷ்பங்களும் மாறுதலின்றி புஷ்பிக்கின்றனவாம்; அஃது தைவலோகத்தின் மஹிமையெனக் கூற வேண்டும்.

2. இதனால் அந்த மாளிகைகள் நக்ஷத்திரமண்டலங்களை அளாவி யிருப்பதாகவும், மணிமயமான மேற்றடங்கள் மிக நிர்மலமா யிருப்பதாகவும் கூறப்பட்டதா யறிக; அருகிலிருக்கும் பொருள் பிரதிபிம்பத்தில் அருகிலிருப்பதாகவும், தூரத்திலிருப்பது அங்ஙனமே தூரத்திலும் காணப்படுவதியல்பு. நக்ஷத்திரங்கள் வெகு ஸமீபத்திலிருப்பதாலேயே அவற்றின் பிரதிபிம்பங்கள் மாடிகளின்மீது மணித்தடங்களில் மலர்களிறைத்தது போற் புலப்படுகின்றன.

3. கற்பகவிருக்ஷத்தின் புஷ்பரஸங்களிலிருந்து இறக்கப்பெற்றதும், மிகவுமின்ப மளிக்கவல்லதுமான மதுவை—என்றும் கூறலாம். [வாருணீ யென்னும் மத்யமானது பிருந்தா

இடையிலிருக்கும் பட்டாடையின் முடியவிழ்ந்து நழுவுமாறு, கரங்கள் நடுக்கமுறக் காதலுடன் அச் சீலையை இழுக்குங்கால், அவ் வனிதைகள், வெட்கத்தினால் மதி மயங்கியவராய், சுடரொளி வீசியவண்ணம் தமது முன்புறத்தில் விளங்கும் மணிமயமான தீபங்களை அவிப்பதற்காக அவற்றின் மீது கந்தப்பொடிகளை வீணிற் பிடி பிடியாய் வாரியிறைப்பதியல்பு.[1] வாயுவினால் அலைத்து ஏவப்பெற்ற நினது இனத்தைச் சார்ந்த நீர்கொண்ட மேகங்கள், அம் மாநகரத்து ஏழுப்பரிகைகளுள்ள மாளிகைகளது மேல்மாடங்களின் சித்திரங்களை நூதன நீர்த்துளிகளால் சீர்குலையச் செய்து, அதனால் அந்த க்ஷணமே அச்சமுற்றவை போல்—ஜாலகந்த துவாரங்களிடுங்கால் அவற்றிலிருந்து கிளம்பும் தூமங்களோவெனத் தோற்றுமாறு—மாளிகைகளது சாளரங்களி

வனமென்கிற உத்யானவனத்திலுள்ள கற்பகவிருக்ஷத்தின் பொந்துகளிலுளது—என்கிற ஸ்ரீவிஷ்ணுபுராண வாக்கியத்தைப் பிரமாணமாகக்கொண்டால் மேலே கூறிய பொருளே 'மது கல்பவ்ருக்ஷப்ரஸூதம்' என்பதற்குப் பொருந்தியதாம்.] இங்கு கூறிய மதுவுக்கு, ரதிபலம் என்கிற காமோத்தீபகமான ஒருவகை மத்யமெனப் பொருளென்று மல்லிநாதன். அஃது பனஞ்சார், சர்க்கரை, நெல்லிக்கனி, கருப்பஞ்சாறு, குங்கிலியம் முதலியவற்றால் பக்குவம் செய்யப்படும்—என்று மதிரார்ணவம் என்கிற நூலிற் கூறப்படுகிறது.

1. பேரொளி வீசும் இரத்தினங்களாலான தீபங்களின் மீது சந்தப்பொடியை விறைத்தாலும், அது மற்ற அக்கினியாலான விளக்கைப் போல் அவிந்துவிடாததாகையால், பெண்கள் வெட்கமதிகரித்து மதிமயங்கி, அதனால் செய்த வீண்செயலாமென்பது கருத்து.

னூடே சிதறுண்டு வெளி வந்து விழுந்தோடுகின்றன.[1] அந் நகரத்து வீடுகளில், நூற் குஞ்சங்களி னூசலாடு மாறு அமைத்திருக்கும் சந்திரகாந்தமணிகள், நள்ளிரவில்—பின்றனால் மறைக்கப்படாமல் மாசற்று விளங்கும் மதியின் கதிரொளிகள் தாக்குவதால்—நீர்த்துளிகளை நன்றாகப் பெருக்கி,[2] அன்பார்ந்த கணவரது புயங்களால் தழுவி விடப் பெற்ற மங்கையருக்கு அக்காலை அங்கங்களிலுதித்த ஆயாஸத்தை அகற்றிவிடுகின்றன.[3] காமனானவன், குபேரனுக்குத் தோழனான பரமசிவன் அப் பட்டணத்திற் பிரத்யக்ஷமாய் வஸிப்பதைக் கருதி, வண்டுகளின் வரிசையை நாணாகக் கொண்ட கோதண்டத்தைப் பெரும்பாலும் பயத்தினால் புயத்தி லேந்துவதில்லை;[4] என்றாலும், புருவ

---

1. இங்கு மேகங்களின் செயலானது, சோரநாயகர் அந்தப் புரத்தில நடமாடும் ஓர் தூதனது உதவியால் மாளிகையின் இரஹஸ்யமான இடத்திற் சென்று, அங்குள்ள ஸ்திரீகளைக் கற்பழித்து, உடனே வேறு வேஷந்தரித்து, அஞ்சியஞ்சிக் குறுகிய வழிகளால் வெளிவந்து ஓடுவதற்கு ஒப்பிடப் படுவதாக உட்கருத்து.

2. சந்திரகாந்தக் கற்கள், சந்திரகிரணங்களின் பரிசத்தால் கசிந்து நீரைப் பெருக்குவதியல்பாம்.

3. சரங்கள் பட்டு வாடிய மல்லிகை முதலிய மலர்களைக் குளிர்ந்த நீருற்றிச சீர் படுத்துவது போல், இங்குஸ்திரீகளுக்கு சீதோபசாரம் என்று அபிப்பிராயம்.

4. ஒருகால் மஹேச்வரன், இமயமலையில் மஹாதவம் புரிகையில், பார்வதியானவள் அவருக்கு உபசாரம் செய்து கொண்டு பக்கத்திலிருக்க, அப்பொழுது மஹேந்திரனால் ஏவப்பட்ட மன்மதன், ஸம்மோஹாஸ்திரங்கொண்டு, அவனிடம் கா

நெறிப்புடன் கூடிய கண்களாகும் அம்புகளால், காமிகளை இலக்கு வைத்துக் குறி தவறாமல் நற்பயன் விளையுமாறு நுட்பமாய்த் தாக்குவதில் அதிக சாதுரியம் வாய்ந்த அங்கனைகளின் அரிய விலாஸங்களாற்றானே, அங்கு, அவ்வனங்களது முயற்சி நன்கு நிறைவேற்றப் படுகின்றது. 1 - 7.

"அவ்வளகையின்கண், நினது இந்திரதனுஸ்ஸைப் போல் பலவர்ணங்களுடன் பளபளத்து அழகாய் உயர்ந்து நிற்கும் வாயிற்படியினால் வெகு தூரத்திலிருந்தே காணக் கூடியதாய், குபேரனது கிருஹத்திற்கு வட புறத்தில் எமது மாளிகை அமைந்துளது; அவ்வகத்தைச் சார்ந்த சிங்காரவனத்தினில் எனது காதலியினால் கருத்துடன் வளர்க்கப் பெற்றதும், கரத்தினால் தாவிப் பறிக்கக் கூடிய பூங்கொத்துகளின் பாரத்தினால் செழித்துத் தழைந்துமிருக்கும் இளங்

தலுண்டாகுமாறு, சிவபெருமானைத் தாக்க முயல, யோகத்திலிருக்கும் அவர் மனது திடீரென்று பார்வதியினிடம் மோஹங்கொண்டு விகாரமடைய, உடனே அந்நிலைமைக்குக் காரணமென்னென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்து எதிரில் நோக்க, காமன் வில்லுங் கையுமாய் ஸந்நத்தனா யிருப்பதைக் கண்டதும், கடுஞ்சினங்கொண்டு, மூன்றாவதான நெற்றிக்கண்ணைத் திறந்து அதிலிருந்துண்டான காடாக்கினியினால் அவனைச் சாம்பலாக்கி, பின்னர் அவனது மனைவியான இரதிதேவியின் கருணைபுரியத் தகும் வேண்டுகோளின்மேல் மனமிரங்கி, மற்றொரு மனோஹர மேனியைத் தந்து அவனைப் பிரத்யும்னன் என்பவனாகச் செய்தனராம். [மன்மதனுக்குக் கரும்பை வில்லாகவும், வண்டுகளின் வரிசையை அதன் ஞாணாகவும், ஐந்து வித புஷ்பங்களை அம்புகளாகவும் கூறுவது வழக்கம்.]

கற்பகவிருக்ஷமொன்று எமது அரும் புதல்வனைப் போல் விளங்குகின்றது. அம் மாளிகைக்கருகில் மரகதக் கற்களிழைத்துக் கட்டிய ஸோபானமார்க்கத்தைப் பெற்றதும், வைடூர்யமயமான வெகு நீண்ட நாளங்களையுடைய பொற்றாமரை மொட்டுகளால் நிரம்பியதுமான நடவாபியும் ஒன்றுண்டு ; [1] அந் நீர்தனில் சிறிதும் சிந்தையின்றி நிலைத்துவாழும் அன்னப்பறவைகள், நின்றனைப் பார்த்தபின் கூட, மானஸப் பொய்கை மிகவும் அருகிலிருந்தும், அதை மனத்தினாலும் நினைக்கமாட்டா. [2] அவ் வாபியின் கரையில், வெகு மனோஹரமான இந்திரநீலச் சிலைகளாலாக்கிய சிகரங்களையுடையதும், சுற்றிலும் வளர்ந்திருக்கும் பொன்மயமான வாழை மரங்களால் கண்களுக்குக்களிப் பூட்டுவதுமான ஓர் க்ரீடாபர்வதமுண்டு ; நண்பனே ! அஃது எனது இல்லாளுக்கு மிகவும் இஷ்டமானதென்றெண்ணி, ஓரங்களில் மின்னி யொளிக்கும் மின்னற் கொடிகளுடன் கூடிய நின்றனை ஆவலதிகரித்து அச்சமுறும் மனத்துடன் நன்றாகக்கண்ணோக்கும் என்றனக்கு

---

1. அந் நீர்தனில் என்பதற்குப் பதிலாக ‘ அதன் கரையில் ’ என்று பூர்ணஸரஸ்வதியின் பாடப்படி அர்த்தமுரைக்க வேண்டும்.

2. ஹம்ஸங்கள் நிர்மலமான நீரில் விருப்பமுள்ளனவாதலால், மேகம் மழையைப் பொழிந்து நீரைக் கலக்கிவிடுகின்றனவென்று நினைத்து, மேகங்களைக் கண்டதும் அவை அஞ்சி மானஸஸரஸ்ஸிற்குப் போய்விடும் ; மானஸப்பொய்கை மிகவும் அகாதமான தேவஸரஸ்ஸானதாலும், அங்கு மேகங்களினாலுண்டாகும் கஷ்டம் கிடையாமையாலும் அவ்விடம் போகின்றன. அந் நடவாபியில் சேறு முதலியதில்லாமல் அஃது ஆழமாயிருப்பதால் நீர் கலங்காதென்னும் நிச்சயத்தினால் மானஸத்தில அவற்றிற்கு விருப்பமில்லையாம்.

அம்மலையே மேன்மேலும் மனத்தினில்நினைவுக்கு வருகின்றது.[1] அக் கிரீடாசைலத்தின்கண், இளந்தளிர்களால் குலுங்கி விளங்கும் ஓர் இரத்தாசோகமரமும், மனத்தைக் கவரு மழகு வாய்ந்த மகிழமர மொன்றும், வாடாக்குறிஞ்சிகளால் வேலியிடப்பெற்ற குருக்கத்திக் கொடிகளாலாகிய மண்டபத்திற்கு மிகவும் அருகிலிருக்கின்றன; அவற்றுள் முதலிற் கூறிய மரமானது நினது தோழியின் இடது பாத பரிசத்தையும், மற்றோர் மரம் அவள் வாயினால் கொப்புளிக்கும் மதுவையும் தோஹதமென்னும்[2] வியாஜத்தைக்கொண்டு, என்னைப் போலவே விரும்பு மியல்புடையன. அவ்விரு மரங்களுக்கு மிடையில், படிகமயமான பலகையுடன்கூடிய பக்ஷிநிற்கும் பொற்றடியொன்று, இளமூங்கிற் குருத்துகளுக்கொப்பான காந்தி பொருந்திய மரகதமணிகளால் அடியில் அமைக்கப்பெற்ற மேடையின்மீது நிற்கின்றது; அந்திப்பொழுதில் அத் தடியின்

---

1. மிக நீலமான மலையின் அடிவாரத்தில் பொன்மயமான வாழைமரங்கள், கருத்த மேகத்தினிடையில் மின்னொளிகளைப் போல் தோற்றும் என்பதாம்; அம்மலையும் தன் மனைவிக்கு விருப்பமானதுபற்றி, அம் மலையைப்போலவே இருக்கும் இம் மேகத்தைக் கண்டு மனமச்சமுற்று மிகக் கவலையுண்டாயிற்றும். [தாம் பழகியனுபவித்த பொருட்களுக் கீடானவற்றைக் காண்பதாலும் கேட்பதாலும் கூறுவதாலும் ஆனந்தத்துடன் அச்சமுறுவது இயல்பு; என்று இரஸாகரமென்னும் நூல்.]

2. தோஹதம் — மர முதலியவை அகாலங்களிலும், அல்லது உற்ற காலங்களிலும் விசேஷமாய்ப் புஷ்பித்துப் பழுக்கும்வண்ணம் செய்யப்படும் ஓர் ஸம்ஸ்காரம். [யௌவனஸ்திரீகளின் இடதுகால் பட்டால் அசோகமரங்களும், அவர் வாயால் கொப்பளிக்கும் மத்யத்தினால் மகிழமரங்களும் தளிர்த்து மலருமென்று கூறுகின்றனர்.]

மீது நிற்கும் நினது மித்திரனை மயிலானது, என் காதலியினால், கங்கணங்கள் மனோஹரமாகக் குலுங்கி யொலிக்கக் கரதாளங்கொட்டி நாட்டியமாட்டி வைக்கப் படுவதுண்டு. அருங் குணமமைந்த அம்புதமே! நீ இக் குறிகளனைத்தையும் மனத்தினில் வைத்துக்கொண்டு, வாயிற்படிக்கு இரு புறமும் வரையப்பெற்ற [1] சங்க பத்மங்களென்னும் நிதிகளின் உருவங்களையும் உற்று நோக்கி, எமது மாளிகை அஃதென்று அறிந்துகொள் வாயாக; அவ்வகம் இப்பொழுது எனது பிரிவினால் ஒளி மழுங்கிப் பாழடைந்திருப்பது போற் காணுமென் பது திண்ணம்; ஆம், கமலமலர், கதிரவன் மறைந்தால், அதற்கியற்கையான சீர்மையை விளக்கமாட்டா தன்றோ? 8—13.

"அப்பா! வேகமா யெளிதில் எழும்பக் கூடிய வண்ணம் சிறு யானையைப் போல் உனதுடலைச் சுருக்கிக்கொண்டு, முற் கூறிய கிரீடாபர்வதத்தின் அழகிய அடிவாரத்தினிற் சென்றமர்ந்திருந்து, மின் மினிப் பூச்சிகளின் பந்திகளைப் போல் [2] மிகச் சிறியதாய் ஒளிவீசி மின்னும் மின்னலாகும் கண்களையுடைத்துக்கொண்டு,

---

1. சங்கத்தையும், பத்மத்தையும் (தாமரை) முடிதனி லேந்திய—அப் பெயர்கொண்ட நிதிகளுக்கு அதிஷ்டான தேவதைகளின் உருவங்கள், அல்லது சங்கம் பத்மம் என கிற வஸ்துக்களின் உருவங்கள்.

2. பேரொளிவீசுமாறு மின்னலுண்டானால், தனது மனைவியின் கண்கள் கூச்சங்கொண்டு கஷ்டப்படுவதுடன் மேகத்தைப் பார்ப்பதற்கே முடியாமற் போய்விடுமெனக் கருத்து.

அவற்றின் பார்வை அவ்வகத்தினுள் விழுமாறு செலுத்தக் கடவாய். 14.

" அப்பொழுது அம் மாளிகையினுள் மிக மனோஹரமான மாதரசி பொருந்தி இருக்கக் காண்பாய்; அவளோ, மெல்லிய மேனியாள்; சற்றுக் கறுத்திறமானவள்; கூர்மையாக மணிமணியாயமைந்த பற்களுடன் கூடியவள்; கனிந்த கோவைப்பழம் போன்ற உதடுகளுடையவள்; மெலிந்த இடையையும் ஆழ்ந்த நாபியையும் பெற்றவள்; மிரண்ட மான்பேடைபோல் கண்ணோக்கும் கட்டழகு வாய்ந்தவள்; கடிதடங்களின் பாரத்தினால் மெல்லெனச் செல்லுபவள்; கொங்கைகளிரண்டாலும் சிறிது வணங்கிய அங்கங்களையுடையவள்; சுருங்கச் சொல்லில், அவள், நங்கையர்விஷயமாய் நான்முகன் செய்த முதற்படைப்பெனத் தகுந்தவள். இப்பொழுது, மனநோயுற்று மிதமாகப் பேசும் அம் மங்கையர்க்கரசியே எனது இரண்டாவது உயிரென்றறிவாயாக; அவள், எப்பொழுதும் உடனிருக்கும் நாயகனான் நான் நெடுந்தூரத்திலிருக்கின்றமையால், கூட இருக்கும் ஆண்பறவையை விட்டுப் பிரிந்த சக்கிரவாகப் பேடைபோல், இப்பொழுது தனித்திருக்கின்றனள்; அச் சிறு பெண்மணியானவள், அதித்தாபதாவலதிகரிக்கின்றமையால், அனலின்றி வளர்வதுபோல் தோற்றம இப் பிரிவுநாட்கள் கழிந்துவருங்கால், பனிப்பருவத்தில் பாழடைந்த பங்கயப் பொய்கையைப் போல் உருமாறியிருப்பளெனக் கருதுகின்றேன்.[1] ஆம்; அபரி

---

1. 'ஹிமஹததளினீவ நஷ்டசோபா வ்யஸநபரம்பரயா விதீர்யமாநா । ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதா க்ருப

மிதமான அழுகையினால் வீங்கிய நேத்திரங்களையுடைய தும், சுடச் சுடப் பெருமூச்செறிவதால் [1]வேற்று நிற முற்ற உதடுகளைப் பெற்றதும், முன்னெற்றிமயிர்கள் அலைந்தாடுவதால் மறைக்கப்பெற்ற சில பாகத்தை யுடையதும், அவளது கரதலத்தின் மீது அமர்ந்திருப பதுமான அவள் முகமானது, நின்றனால் சிறிது மறைக் கப்பெற்று மழுக்கங் கொண்ட காந்தியையுடைய மதியைப்போல், [2]மனமிரங்கக் கூடிய நிலைமையை நிச் சயமாய் அடைந்திருக்கும். 15--17.

"நற்குணசாலியான நண்பனே! நீ அவ்விடத்தில் என் காதலியைக் காணும் பொழுது, அவள், தைவங் களுக்குப் பணிவுடன் பூஜை செய்வதிற் பெரு முயற்சி கொண்டவளாகவேனும், பிரிவாற்றாமையினால் இங் ஙனம் எனது மேனி மிக மெலிவுற்றிருக்குமென மன வூக்கத்தினால் உருவாப்புணர்ந்து இந் நிலைமையிலிருக்கும் எனதுடலுக்கு நிகரான வடிவத்தை வரைந்தவாறு

ணாய்த் தசாம் ப்ரபந்நா'—ஜானகியானவள், பலபல மனத்துயரங் களால் பீடிக்கப்பட்டு, பனியினால் பாழான பங்கயப் பொய்கை போல் ஒளியிழந்தும், ஆண்பறவையை விட்டுப் பிரிந்துப் பரி தவிக்கும் சக்கிரவாகப் பெடையோ என்னும் மிகவும் எளிய நிலைமை யைப் பெற்றிருக்கின்றனள்; என்கிற ஸ்ரீமத்ராமாயணத்திற் கூறிய வர்ணனையை நூக் கவியும் ஆதரவுடன் அனுஸரிக் கின்றனன்.

1. மிகுதியான மனத் துயரத்தினால் பெருமூச்சானது வெப்பங்கொண்டு வெளிவருவதால், அவ் வேக்காட்டினால் உதடுகள் வேற்று நிறமுற்றனவாம்.

2. இங்கு மயிர்களுக்கு மேகமும், அவற்றால் சிறிது மறைக்கப்பெற்ற முகத்திற்கு மேகத்தால் சற்று மறைந்த சந்திரனும் முறையே உபமானங்களாம்.

யினும், கூட்டிலிருக்கும் இனிதாகப் பேசுந் திறமை பொருந்திய பெண்கிளியை நோக்கி 'அழகிய அரும் பறவையே! நீ எமது நாயகனது மனதுக்கின்பமாயிருந் தனையே; நீ மனத்தினாலேனும் அவரை நினைக்கின் றனையோ!' என்று வினவியவண்ணமாயாகிலும், எனது பெயரைக் குறியாகக் கொண்டதும் பற்பல பதங்களா லிணைக்கப்பெற்றதுமான பாட்டொன்றைப் பாடவிரும் பியவளாய்—அழுக்கடைந்த ஆடையையுடைய தன் மடிதனில் வைத்திருக்கும் வீணையின்மீது கண்ணீர் வீழ்ந்து அது நனைய, அதன் நரம்புகளை வெகு கஷ் டத்துடன் துடைத்து—தான் பாடமுயன்ற இன் னிசைமுறையைத் தானே அடிக்கடி மறந்து மன வருத்தமுற்றவளாகவேனும், வரையறுத் தேற்படுத் திய விரஹநாட்கள் முடிவுறற்கு மிகுந்துள்ள மாதங் களை எண்ணுவதற்கு வாயிற்படியிலிட்ட பூக்களை யெடு த்துப் பூமியில் வரிசையாய் வைத்தவாறாகிலும், என்னு டன் கூடுவதாக இருதயத்தினுள் தியானிக்க முயன்று இன்பமனுபவித்துக் கொண்டாயினும் இருக்கப்போ கின்றனள்;[1] ஏனெனில், பெரும்பாலும் இவையே, மனதுக்கினிய மணாளரை விட்டுப் பிரிந்த மங்கை யருக்குப் பொழுதுபோக்கப் பொருந்திய செயல்க ளாம். இவ் விரஹவேதனையானது, இரவில் விநோதச்

1. ''கணவன் மனவருத்தங் கொண்டால் வருத்தமுற்றும், களித்திருக்கையிற் களிப்புற்றும், தேசாந்தரம் சென்றிருக்கை யில் மலினவஸ்திரந் தரித்து மெலிந்த மேனியைப் பெற்றும், உயிரிழக்கையில் உயிரைத் துறந்தும், இவ்வாறு எந் நிலைமையி லும் கணவனைப் பின்பற்றுபவளே பதிவிரதை யெனப் படுவ ள்—என்பதற்கேற்ப இங்கு வர்ணிக்கப்பட்டது.

செயலேதுமின்றி மிகத் துயரமுற்றிருக்கும் நினது தோழியை எங்ஙனம் வருந்தச் செய்யுமோ, அவ்விதம் பகலில் முற் கூறியவண்ணம் பற்பலப் பணிகளிற் கருத்தாயிருக்கையில் அவளைத் துன்புறுத்தா தென்பது எனது துணிபு; ஆதலின், நீ, எனது செய்திகளைச் செப்பி இன்புறச் செய்வதற்கு மிகவும் இன்றியமையாததான நள்ளிரவில், மாளிகையின் ஓர் சாளரத்தின்கண் தங்கியிருந்தவண்ணம், நித்திரையின்றி நிலத்திற் படுத்திருக்கும் அக் கற்பழியாமாதைக்[1] கண்ணுறுவாயாக. மேலும் அவள், அப்பொழுது, கீழ்த்திசையின் கீழுதித்திருக்கும் கலையொன்றையே மிகுதியாகக் கொண்ட இந்துவின் இளம்பிறைபோல், மனநோயால் மிக மெலிவுற்று விரஹகாலத்திற்கேற்ற சயனத்தில் ஒருச்சாய்ந்து சயனித்தவளாய்[2]—முன்பு என்னுடன் இஷ்டப்படி இன்பங்களனுபவித்துக் கொண்டு நொடியைப் போற் போக்கிய அவ்விரவையே இப்பொழுது என் பிரிவாற்றாமையினாற் பெரிதும் வளர்வதாகப் பாவிப்பதால்—அவ்விரவைக் கடுங்கூடாகக் கண்ணீர் சொரிந்தவண்ணம் கஷ்டத்துடன் கழிப்பள். அவள், வெற்று நீராட்டத்தினால் வறண்டு கண்டஸ்தலவளவும் புரண்டு விழுந்த முன்னெற்றிமயிர்களை, தளிர்போன்ற உதடுகளுக்கு

1. மேகம் தனக்கு நண்பனாதலாலும், அவள் மஹாபதிவிரதையானதாலும், நள்ளிரவில் அவளைக் காணப் போவது குற்றமல்லவெனக் குறிப்பிட 'கற்பழியாமாதை' என்றுரைத்தனன்.

2. அவள், மிக மெலிவுற்று விரஹகாலத்திற்கேற்ற சயனத்தில் ஒருக்களித்துப் படுத்திருப்பதானது, கீழ்த்திசையின் கீழ் ஒரு மூலையாகச் சாய்ந்த இளம்பிறை போல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

வாட்டமளிக்கும் பெருமூச்சால் அலைந்தாடச் செய்து
கொண்டும், மேன்மேலும் ததும்பி யெழும் கண்ணீர்
இடங்கொடாது இடையூறு செய்கையிலும், கனவிலா
வது எனது சேர்க்கை நேரிடுமோவென நித்திரையை
ஆவலுடன் விரும்பியவண்ணமு மிருப்பளென்பது
திண்ணம். பிரிவுறும் முதல் தினத்திற் பூமாலையகற்
றிப் பெருந் துயரத்துடன் முடியப் பெற்றதும், சாபத்
தினிறுதியிற் சோகம் நீங்கிய என்றனால் அவிழ்க்கப்
பெற வேண்டியதும், சிக்குண்டுச் சீர்குலைந் திருப்பதால்
பரிசிக்குங்கால் கிலேசம் தருவதும், ஒரு பின்னலா
யமைக்கப்பெற்றிருப்பது மான கேசபாசத்தை,[1] சிகைக்
கப்படாமையால் வளர்ந்திருக்கும் நகங்களையுடைய
தனது கரத்தினால் கபோலத்திலிருந்து அடிக்கடி ஒதுக்
கிக்கொண்டு ஒருவாறு ஏக்கமுற்றிருப்பாள். அன்றி
யும், அவள், அமுதப்பெருக்குபோல் அதி சீதளமாகச்
சாளரங்களிற் புகுந்து வரும் மதியின் கதிரொளிகளை—
அவற்றினிடம் விரஹத்திற்கு முன்பிருந்தப் பிரீதி
யினால்—முதலிற் பெருமையுடன் பார்த்துவிட்டு, அங்
ஙனமே மிகத் துன்பமுற்றுத் திரும்பிய [2] தன் கண்களை,
கண்ணீர் கசிந்துக் கனமாயிருக்கும் இமை மயிர்களால்

---

1. கேசபாசம்—தலைமயிர். [முற்காலத்தில் பதிவிரதைகள், பர்த்தாக்கள் தேசாந்தரம் போயிருக்கையில் தமது தலைமயிரை ஒரு பின்னலாகப் பின்னிக் கட்டிவிடுவதும், பின்பு பர்த்தாக்கள் வந்து சேர்ந்ததும், தாமோ அல்லது பர்த்தாக்களோ அதை அவிழ்த்துவிடுவதும் ஆசாரமாம்.]

2. தம்பதிகள் பிரியாமலிருக்கையில் சந்திரன் முதலியதைக் காண்பது மகிழ்ச்சிக்கிடமாகவும், விரஹகாலத்தில் சந்திரன் முதலியதைக் காண்பது மிக ஸந்தாபகரமாகவும் இருப்பதியல்பு.

மூடிக் கொண்டு, மேகங்களால் மறைக்கப் பெற்ற பகற் பொழுதில் மூடிக் கொள்ளாமலும் மலர்ச்சியுறாமலு மிருக்கும் நிலத் தாமரைபோல், நித்திரையைப் பெறா மலும் விழிப்புறாமலும் வெகு வருத்தமுற்ற நடு நிலைமை யிலிருப்பள். பூண்களைப் பரிஹரித்துப் பரிதவிக்கத் தகும் பெருங் கஷ்டதசையைப் பெற்றதான தனது அழகிய மேனியைச் சயனத்தின்மீது அடிக்கடிச் சாய்த்து,[1] அதனை மிகத் துயரத்துடன் தாங்குப வளான வன்மை யிழந்த அவ்வேழைப் பெண்மணி, நின்றனையும் நூதனமான நீருருவங்கொண்ட கண்ணீ ரைச் சொரியுமாறு நிச்சயமாய்ச் செய்யப் போகின் றனள்; ஏனெனில், ஈரமுள்ள உள்ளத்தோர்[2] அனை வரும் பெரும்பாலும் கருணைபுரிந்து மனங் கசியுந் தன்மையராவரன்றோ? 18 - 26.

"எனது ப்ரியஸகியின் மனது என்றனிடம் நிரம்ப வும் அன்புகொண்டதென யான் அறிவேன்; ஆத லால் முதற் பிரிவில் அவள் இத்தகைய நிலைமையி லிருப் பளென ஊஹித்துக் கூறுகின்றேன்; ஆனது பற்றி, யான் மனதைக் கவர்ந்திழுக்கவல்ல ஸௌந்தர்யம் வாய்ந்தவனென்கிற எண்ணமே இங்ஙனம் என்றனை மொழியச் செய்ததெனக் கருதவேண்டாம்; அப்பா! யான் விளம்பிய விஷயமனைத்தும் விரைவிலேயே இவ்

---

1 மனம் மிகக் கவலை கொண்டிருப்பதால், ஒன்றுந் தோன்றாமல், சற்றுப் படுப்பதும் சற்றெழுந்துட்காருவதுமாயி ருப்பது இவ்வித நிலைமைகளுக் கியல்பு.

2. ஈரமுள்ள உள்ளத்தோர் — இரக்கமுறும் தன்மையர்; மேகமும் நீரை யுட்கொண்டு ஈரமான உட்புறத்தையுடையது என்று இருவகையான பொருளுண்டு.

சிதமென நின்றனக்கு நேரில் நன்கு விளங்கப்போகின்றது. 27.

"வாரி முடிக்காத முன்னெற்றிமயிர்களால் தடையுண்ட கடைக்கண்பார்வையை யுடையதும், அஞ்ஜனப் பசையற்றதும், மதுபானத்தை மறுத்ததால் புருவநெறிப்பெனும் விலாஸத்தை மறந்ததுமான அம் மிருகாக்ஷியின் [1] கண்ணானது, நீ அருகிற் சென்றதும் மேற்புறமாகத் துடிக்கக் கூடுமாதலின், அஃது அப்பொழுதுத் துள்ளியோடும் மத்ஸ்யத்தினால் அசைக்கப்பெற்றுக் குலுங்கும் கருங்குவளை மலருக்கு நிகரான சீர்மையை ஏற்குமென் றெண்ணுகிறேன்.[2] மேலும் என்றனால் உண்டாக்கப் பெற்ற நகத்தழும்புகளை இழந்து வருவதும், நெடுநாட்களா யணியப்பெற்ற நல்

1. மிருகாக்ஷி = மான்களுடைய கண்களைப் போல் விசாலமான அழகிய கண்களை யுடையவள். [தலைமயிரை வாரி முடிக்காமலும், கண்களுக்கு மை தீட்டிக் கொள்ளாமலும், மதுபானம் செய்யாமலு மிருப்பதற்குப் பிரிவாற்றாமையே காரணமென்க.]

2. கண்ணானது மேற்புறமாகத் துடித்தால் இஷ்டலாபமுண்டாம் என்று நிமித்தவிதானமென்கிற சகுன சாஸ்திரம் கூறுகிறது. இங்கு கணவனது க்ஷேமஸமாசாரம் சொல்ல மேகம் வந்திருப்பதே இஷ்டலாபம். [ப்ராஸ்பந்ததைகம் நயநம் ஸுகேச்யா: மீநாஹதம் பத்மமிவாபிதாம்ரம் = கரிகுழலாளான ஸீதாதேவியின் கண்ணொன்று, அக்காலை, மத்ஸ்யத்தால் தாக்கப் பெற்றசையும் தாமரை மலர்போலத் துடித்தது: என்று, ஹனுமான் ஸீதையிருக்குமிட மடைந்ததும் ஸ்ரீவால்மீகி வர்ணிக்கும் அழகிய விஷயத்தை இக் கவியும் இங்கு உசிதமெனப் பின்பற்றினு னென்க.]

முத்துக் கோவையை [1] விதிவசத்தினால் விலக்கியிருப்பதும், திரண்டுருண்டு வளர்ந்துப் பசுமையாயுள்ள வாழைமரத்தண்டுபோல் வெண்மையானதுமான அவளது இடது துடையும் துடிக்கப்போகின்றது. 28 - 29.

"ஓ அம்புதமே! நீ அவ்விடம செல்லுங்கால், அவள் அமைதியுடன் துயிலுறு மின்பத்தைப் பெற்றிருப்பளேல், அக்காலை, நீ அவளருகில் முழக்கஞ் செய்யாது, ஓர் யாமமளவும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுகிறேன்; அவளது அன்பனை யான் எங்ஙனமோ கனவிற் போய்த் தோன்ற, அப்பொழுது அவ லதிகரித்து என்றனை நன்கு ஆலிங்கனம் செய்துகொள்வளாதலின், அவளது கொடிபோன்ற கரங்களின் கட்டானது, எனது கண்டத்திலிருந்து அந்த க்ஷணமே அவிழ்ந்து விடுமாறு நினது முழக்கங்களால செய்து விடலாகாது. 30.

"அப்பால், நினது நீர்த்திவலைகளால் குளிர்ந்து உன்றனிடமிருந்துண்டாகும் மந்தமாருதத்தினால், நீ அவளை மெல்லென எழுப்பி, மிக நூதனமான மல்லிகையரும்புகளையும் அவளது மனத்தையும் ஒருமிக்க மலரச் செய்கையில்,[2] அப் பெண்மணியானவள், நீ சாய்ந்து

1. துடையளவும் புரளும் நீண்ட நல்முத்துச சரங்களுடன் கூடிய அரைஞாண்மாலையை வடதேசத்து மாதர் அணிவது வழக்கம்.

2. மழைத் திவலைகளால் சீதளமான காற்றின் பரிசத்தால் மலர்கள் விகஸிப்பதும், பிராணிகளின் மேனிகளது ஸந்தாப முதலியவை சாந்தி யடைவதும் அனைவரும் அறிந்ததே.

கிற்கும் சாளரத்தை இமைகளசையாமற் பார்த்த வண்ண மிருக்க, [1] நினது மின்னொளியை யுள்ளடக்கிய வாறு, கர்ஜனைகளெனும் கம்பீரமொழிகள் கொண்டு நீ பின்வரும் செய்திகளைச் செப்ப முயல்வாயாக. 31:—

'''ஓ நீடூழிவாழும் நாயகனைப் பெற்ற [2] நங்காய்! என்றனை—மார்க்கத்திற் களைத்து வருத்த முறும் வழிப் போக்கரது குழாங்களை, காதுகளுக் கினிமையான கம்பீர கர்ஜனைகளால் அவரது அகங்களிலுள்ள அபலைகளின் [3] வேணிகளை அவிழ்த்துவிட ஆவலுள்ளனவாகச் செய்து, அவரை மிகத் துரிதமா யேகுவதற் கேவுந் திறமை பொருந்திய நீர்கொண்ட மெனவும், நினது மணாளன் மொழிந்த செய்திகளை மனத்தினில் வாங்கிக்கொண்டு உனதிடம் வந்திருக்கும் அவரது அருமைத் தோழனெனவும் அறியக் கடவாய்.''' 32.

"நற்குணசாலியான மேகமே! நீ இவ்வாறுரைத்ததும், அவள், ஆஞ்ஜனேயரைக் கண்ட ஸீதாபிராட்டி போல் மிகு மகிழ்ச்சியினெழுச்சியினால் ஆறுதலுற்று உள்ளம் பூரித்தவளாய், உயர நிமிர்ந்து உன்றனை உற்று

1. மின்னொளி வீசினால் அவள் கண்கூசிப் பார்க்கமாட்டாளாதலால், மின்னலை யுள்ளடக்கிக்கொள்ளெனக் கூறினன்.

2. இதனால், தன் பர்த்தாவுக்கு ஆபத்துண்டாகவில்லை யென்றும், பிழைத்திருப்பதாகவும் அறிந்து, அவள், முதலிலேயே மனம் பதைக்காமல் ஆறுதலுறட்டும்—என்று மேகம் இங்ஙனம் ஸம்போதனம் செய்கின்றதாம்.

3. இயற்கையிலேயே பெண்மக்கள் பலங்குன்றியவராதலால், அவர் அபலைகள் எனப்படுவர்; தமது அருமைக் கணவரை விட்டுப் பிரிந்திருப்பதால், அவர்கள் இன்னும் மனவருத்தத்தால் மெலிந்திருப்பரெனக் குறிக்கவே இங்கு அபலைகள் என்று பிரயோகிக்கப்பட்டது.

நோக்கித் தகுந்தவாறு உபசரித்துவிட்டு, அப்பால் ஊக்கத்துடன் உன்றனிடமிருந்து செய்திகளைத் தையும் செவியுறப் போகின்றனள்; ஏனெனில், உயர் குலத்துதித்த உத்தமஸ்திரீகளுக்கு, அவரது நட்பு மிகுந்த நாயகரிடமிருந்து நண்பனொருவன் வரினும், அஃது, அம் மாதரால், அக் கணவரது சேர்க்கையினும் சிறிதே குறைந்ததெனக் கருதப்படுமாம். 33.

"நல்லாயுளைப் பெற்று நெடுங்காலம் வாழும் நண்பனே! எனது மொழியினாலும், உதவி புரியும் உனது வார்த்தையினாலும் அவளை நோக்கி அடியில் வருமாறு மொழிந்திடுவாயாக:—'"ஓ கோமளாங்கி! உன்றனை விட்டு எப்பொழுதும் பிரியாமலிருந்த நினது பர்த்தா, இப்பொழுது, இராமகிரியிலுள்ள ஆசிரமங்களின்கண், அபாயமேதுமின்றி க்ஷேமமாய் வஸித்து வருகின்றனர்; அவரை விட்டுப் பிரிந்திருக்கும் உனது க்ஷேம விருத்தாந்தத்தையும் அவர் வினவுகின்றனர்."'. அப்பா! எளிதில் ஆபத்துறுமியல்புடைய பிராணிகளிடம் இதுவே முதலில் மொழியத் தகுந்ததோர் முக்கிய விஷயமாம். 34.

"நீ மீண்டும் இங்ஙனம் உரைக்கவேண்டும்:—'"நினது பர்த்தா, அப் பாழும் பகையாளியான விதியினால் தடுக்கப்பெற்று, இப்பொழுது இவ்விடம் வர வழியற்றவராய், வெகு தூரத்திலிருந்தவண்ணம்—மிக மெலிவுற்றதும், மன்மததாபத்தினாற் கடுஞ்சூடுகொண்டதும், கண்ணீரைச் சொரிந்தவாறிருப்பதும், ஆவலதிகரித்தலைவதும், மென்மேலும் மிகப் பெருமூச்

செறிவதுமான அவரது சரீரத்தினுல், அங்ஙனமே மிகவு மிளைத்து, ஸந்தாபமுற்று, கண்ணீரைப் பெருக்கி, இடையுறுமலாவல் கொண்டு, சுடச் சுடப் பெருமூச்செறியும் நினது அங்கத்தினில் அனுப்ரவேசிப்பதாக அந்தந்த எண்ணங்களால் அவர் தியானம்செய்கின்றனரம்மா ![1] யாதொருவர், சாபலிய மேலிட்டவராய், ஸகிகளது முன்னிலையில், நினது முகத்தைத் தனது முகங்கொண்டு பரிசிக்கப் பேரவாவுடன், வெளிப்படையா யுரைக்கத் தகும் பேச்சையும்—முன்பு நினது செவிதனில் முகம வைத்து மெல்லென மொழிய முயன்றனரோ, அத்தகைய உனது நாயகன், இப்பொழுது கண்கொண்டு காணவும் காதுகளால் கேட்கவுமியலாதவாறு நெடுந்தூரத்திற் பிரிந்திருந்தவராய்,' ஆவலதிகரித்து மேலெழுந்து வந்த மொழிகளை, இங்ஙனம் என்றனைக் கொண்டு உன்றனக்கு உரைத்திடுகின்றனர். 35 - 36:—

'''' எனதருமைக் காதலியே! யான், கருஞ்சிவைக் கொடிகளில் நினது அங்கத்தின் அழகையும், மிரண்ட மான்பேடிகளது கண்ணோக்கத்தினில் உனது பார்வையின் பான்மையையும், வெண்கதிரோனிடம் உனது வதனத்தின் வனப்பையும், மயிற்றோகைத்

---

1. மிக மெலிவுற்றதும் என்பதுமுதல், மிகப் பெருமூச்செறிவதுமான என்கிறவரையில் கூறப்பட்ட தனது (யக்ஷனது) சரீரநிலைமைகளை நோக்கித் தன் மனைவியின் தேஹநிலைமைகளும் அவ்விதமே இருக்குமென்று அனுமானித்து, தனது நிலைமைக் கேற்ற விசேஷணங்களையே தனது மனைவியின் மேனிக்கும்—மிகவுமிளைத்து என்பதுமுதலாக முறையே மொழிந்தனன் என்றறிக.

திரள்களின்கண் நினது மயிர்களின் மனோஹரத்தன்மையையும், ஆறுகளிற் புலப்படும் சிற்றலைகளின்பால் நினது புருவநெறிப்பின் நேர்த்தியான விலாஸங்களையும் கண்ணுற்று வருகின்றேனல்லாது,[1] ஓ சண்டி![2] எங்கேனும் ஒரே பொருளில் உனது ஒப்புமையனைத்தும், அந்தோ ஒருமிக்கச் சேர்ந்திருக்க யான் காண்கிலேன்! யான், பிரணயகோபங்கொண்ட[3] உன்றனது உருவத்தை, ஓர் சிலாதலத்தின்கண் காவிக்கற்களின் வர்ணங்களைக்கொண்டு வரைந்து, பின்னர், நினது பாதங்களில் என்றனையும் வீழ்ந்திருக்கும் பாவனையாய் எழுதி முடிக்க எண்ணங்கொண்டிருக்கையிலேயே, அடிக்கடிப் பொங்கியெழும் கண்ணீர்கள்

---

1. வெகு நேசமுள்ள தம்பதிகள், ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்திருக்கையில் விரஹவேதனையால் பீடிக்கப்பட, அப்பொழுது, கணவன் மனைவியினுடையவும் மனைவி கணவனுடையவும வடிவத்திற் கொப்பான வஸ்துக்களைக் காண்பதும், அவ் வடிவத்திற்கேற்ற சித்திரத்தை யெழுதுவதும், கனவுகளில் அவரைக் காண விரும்புவதும், அவரது அங்கங்களைப் பரிசித்துவரும் பொருட்களைப் பார்ப்பது அல்லது பரிசிப்பதும், அத் தம்பதிகளின் மனம் ஆறுதலுறும் உபாயங்களாம்; அவற்றுள் இங்கு ஒப்புமையுள்ள வஸ்துக்களைக் காணல் என்கிற முதல் விஷயம் கூறப்பட்டது.

2. யக்ஷனானவன், தன் மனைவிக் கொப்பான மற்றொரு பொருளேனும் காணக் கிடைக்கவில்லையே யென்று மனஞ்சலித்து, மாயக் கோபத்தினால் மனைவியை நோக்கி 'சண்டி' எனத் திட்டுவது போல் கூறுகிறான்.

3. பிரணயகோபம் = தம்பதிகளுக்குப் பிரீதிவிசேஷத்தால் ஒருவருக் கொருவர் நேரிடும் கபடமான கோபம்.

எனது கண்ணை மறைத்திடுகின்றனவே![1] இப் பொல்லாத் தைவம், அவ் வகையிலும் எமது சேர்க்கையை ஸஹிக்கவில்லையன்றோ! எங்ஙனமோ[2] எனது கனவுகளில் வந்து தோன்றி என்றனால் அவ்வாறு கிடைக்கப் பெற்ற நின்றனை நெருங்க ஆலிங்கனம் செய்வதற்காக ஆகாயத்தில் ஆசையுடன் புயங்களை வீணில் நீட்டும் என்றனைக் கண்ணுறும் இவ்விடத்து வனதேவதைகளின் கண்களிலிருந்து நல்முத்துகளைப் போல் மிகத் திரண்டுருண்ட கண்ணீர்த் துளிகள், காட்டுமரத்தளிர்களின்கண்[3] பலவாறு உதிராமலிருப்பதில்லை.[4] நற்குணங்களுக்குப் புகலிடமானவளே! இமயமலையிலுள்ள தேவதாருமரங்களது தளிர்களின் மொட்டுகளை யொடித்து, அவற்றிலிருந்தொழுகும் பாற்பெருக்கின் பற்றினால் பரிமளம் பெற்று, அப்பொழுதே தென்திசை நோக்கி வீசும் குளிர்ந்த மந்த மாருதங்கள், முதலில் நினது அங்கத்தைப் பரிசித்

---

1. இதனால் சித்திரமெழுதல் என்கிற இரண்டாவது விஷயம் கூறப்பட்டது.

2. விரஹ வேதனையால் உறக்கங் கொள்வது மிகவுமரிதாதலால் 'எங்ஙனமோ' எனக் கூறப்பட்டது.

3. தேவதை முதலிய மஹாத்மாக்களது கண்ணீர் பூமியில் விழுந்தால், அத் துயரத்திற்கு இலக்ஷியமாயிருப்பவர் துன்பம் அல்லது மரணம் அடைவர் என்று சாஸ்திரம் கூறுவதால், யக்ஷனுக்கு அவ்வித ஆபத்து ஒன்று முண்டாகவில்லையென்று குறிப்பதற்காகவே, கண்ணீர்கள் தளிர்களில் வீழ்ந்தன என்றுரைக்கப்பட்டது.

4. காதலியைக் கனவுதனிற் காண்பது இதனால் மொழியப் பட்டது.

திருக்குமென்றெண்ணி, யான் அவற்றை ஆதரவுடன் தழுவுகின்றேன்.[1] 37 - 40.

"""ஓ சஞ்சலாக்ஷி![2] வெகு நீண்ட யாமங்களை யுடைய இரவானது [3]எங்ஙனம்நொடியைப்போல் சுருக்கங் கொள்ளு மெனவும், எல்லாக் காலவேற்றுமைகளிலும் பகற்பொழுதும் எவ்வாறு மிக மந்தமான வெயிலுடன் கூடியதாயாகு மெனவும் பலவாறு ஆகாத பணிகளையும் ஆகவேண்டி விரும்பும் என் மனதானது, மிகவும் ஸந்தாபகரமான நினது விரஹவேதனைகளால் இங்ஙனம் சரணின்றி ஸங்கடத்தில் வீழ்ந்ததே! மங்களகரமான மேனியழகு வாய்ந்தவளே![4] நானே, நானாவிதமாக எவ்வெவற்றையோ எண்ணி யெண்ணி என துடலுக்குத் தீங்கு நேரிடாவண்ணம் அதைத் தாங்கி வருகின்றேனாதலின், நீயுமிப்பொழுது இந்நிலைமையை

1. மனைவியினது மேனியின் பரிசத்தைப் பெற்ற பொருளிற் பிரீதி பானது, இதனால் கூறப்பட்டது. [வாஹி வாத யத: காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருச = வாயுவே! மனோஹரமான வடிவழகு வாய்ந்த என் தர்மபத்தினியான ஸீதையை முதலிற் பரிசித்து, பிறகு அங்கிருந்து என்மீது வீசுவாயாக; என்கிற ஸ்ரீமத் ராமாயணவர்ணனை இக் கவிசிரோமணியினாலும ஆதரவுடன் பினபற்றப் பட்டதெனக.]

2. சஞ்சலாக்ஷி = மிரண்டு அழகாய் அசைந்து விழிக்கும் கண்களை யுடையவள்.

3. விரஹவேதனையால் நித்திரையின்றி விழித்திருப்பதால், இரவின் யாமங்கள் நீண்டு வளர்வதுபோல் தோற்றுவதியல்பு.

4. தன் மனைவி, மங்களகரமான இலக்ஷணங்களுடன் கூடிய சரீரத்தைப் பெற்றிருப்பதால், யக்ஷன் (அவள் கணவனை) தனக்கு அசுபமான தீங்கு நேரிடாதென்று, இந்த ஸம்போதனத்தினால் குறிப்பிடுகின்றான்.

நோக்கி நிரம்பவும் அச்சமுற வேண்டாம்; உலகில் எவருக்குதான் இன்பம் அல்லது துன்பமாயினும் அளவிறந்ததாய் இடைவிடாம லுண்டாயிற்று? அந்தந்த தசைகளெல்லாம் சக்கிரமுனைபோல் கீழும் மேலுமாகப் புரண்டோடு மியல்புடையனவன்றோ? சார்ங்க மென்னும் வில்லைக் கரந்தனிலேந்திய ஸ்ரீமந் நாராயணன், சேஷசயனத்திலிருந்து எழுந்திருக்கையில்[1] என்றனக்குச் சாபவிமோசனமாகும்; ஆதலின், இன்னும் மிருந்துள்ள நான்கு மாதங்களையும் மெல்லெனக் கண்களை மூடிக் கொண்டு நீ கழித்திடுவாயாக; பின்னர், யாம் இருவரும் சரத்காலத்திற் பூர்ண சந்திரனது மாசற்ற நிலவினால் மனோஹரமாய் விளங்கும் இரவுகளில், விரஹத்தினால் மிகவும் செழித்தோங்கிய நமது அந்தந்த கோரிக்கைகளனைத்தையும் களிப்புடன் அனுபவிக்கப் போகின்றனம். 41 - 43''"

"' அம்மா! நின்றனக்கு நம்பிக்கை யுண்டாவதற்கு அவர் மீண்டும் மொழிந்ததாவது:—"" முன்னொருகால், நீ, சயனத்தில் எனது கழுத்தைத் தழுவிய வண்ணம் கண்வளர்ந்து, மீளவும் திடீரென ஏதோ குரல் விட்டுப் புலம்பிக்கொண்டே கண்விழிக்க, யான் அது கண்டு உன்றனைப் பலமுறை வினவ, நீயும் 'வஞ்

---

1. ஸ்ரீமந் நாராயணன், ஆடிமாதத்து சுக்கில ஏகாதசியன்று பாற்கடலில் சேஷதல்பத்தின்மீது சயனித்து, கார்த்திகை மாதத்து ஏகாதசியில் மீண்டும் பள்ளியெழுந்திருப்பதாக சாஸ்திரம். [ஆகையால், இதற்குமுன் சரத்கால ஆரம்பத்தில் யக்ஷனுக்குச் சாபம் நேரிட்டு, முற்கூறியபடி ஒரு வருஷ காலம் அச் சாபம் அனுபவிக்கப்பட்டு, வர்ஷருதுவின் இறுதியில் அல்லது சரத்காலத்தின் ஆரம்பத்தில் அதிலிருந்து விமோசன முண்டாயிற்று; என்றறியவும்.]

சனைக் காரரே! நீர் எவளோ வேறொருத்தியைக் களிப்புறச் செய்துகொண்டிருப்பதாகக் கனவுகண்டேனே' என உள்ளத்தில் நகைத்தவாறு நவின்றனையன்றோ? கருநெய்தல்மலர் போன்ற கரிய நேத்திரங்களுடையவளே! இவ்வாறறிவிக்கப் பெற்ற அறிகுறியினால் யான் உயிருடனிருப்பதாயுணர்ந்த பின், உலகத்தோர் கூறும் வீண் வார்த்தைகளால் எனது உயிர்வாழ்க்கையில் நின்றனக்கு நம்பிக்கையின்மை நேரிடாமலிருக்கட்டும்; ஏனெனில், ஒருவரை விட்டொருவர் பிரிந்த பின்னர், அவரது அன்பானது நாளடைவில் அழிவுறுமென ஜனங்கள் ஏதோ கூறுகின்றனரெனினும், அவ்வன்பானது அனுபவிக்கப் படாமையால், விருப்பமான வஸ்துவினிடம் இன்னும் விசேஷமாய் இன்பமேலிட்டு, பிரீதியின் இராசியாகப் பெருகுமென்றுரைப்பதே பொருந்தும்.'''' என மொழிந்தனர்.''' 44-45.

"ஒளிர்ந்த குணமமைந்த கார்முகிலே![1] நீ உற்றோரால் செய்வதற்குற்ற இப் பேருதவியை என்றனக்குச் செய்திடுவதாய் மனவுறுதிகொண்டனையோ? நீ மறுமொழி கூறினையாயின், அப்பொழுதுதான் உதாரத் தன்மை உன்றனக்குண்டென்றுரைக்க யான் கருதுகிறேனில்லை;[2] ஏனெனில் சாதகப் பறவைகள் உன்

---

1. தண்ணீரையுட்கொண்டிருப்பதால் மேகம் குளிர்ந்த குணமுள்ளதெனவும், ஆகையினாலேயே தனது வேண்டுகோளை மறந்துவிடும் கடுங்குணம் அதற்கு இராதெனவும் இதனால் குறிப்பிடப்பட்டது.

2. இரக்கமற்று எனது வேண்டுகோளை மறந்துவிடத் தகும் அவ்வித தைரியம் உன்றனக்கு உண்டென யான் கருதவில்லை—என்று பூர்ணஸரஸ்வதி பொருளுரைக்கின்றான்.

றனை யாசிக்குங்கால், [1] நீ, நிச்சப்தமாயிருந்த வண்ணமல்லவோ அவற்றிற்குத் தண்ணீரைத் தந்தருளுகின்றனை? மேன்மக்கள், தமது பிரீதிக்குப் புகலிடமானவரிடத்து அவர் விரும்பிய உதவிகளைக் காரியத்தினால் நிறைவேற்றிக் காட்டுவதையே மறுமொழியாகக் கொண்டவரன்றோ ? எனதன்பார்ந்த அம்புதமே! [3] அநுசிதமாக[4] இங்ஙனம் வேண்டிக்கொள்ள முயன்ற என்றனக்கு விருப்பமான இப் பணியை, எனதிடம் நேசப்பான்மையினாலோ, இன்பமுற்ற இல்லாளை விட்டுப் பிரிந்திருக்கின்றேனென்று இரக்கங்கொண்ட என்

1. சாதகப்பறவைகள் மழைநீரை ஆகாயத்திலேயே ஏந்திப் பருகுமேயன்றி, பூமியில் வீழ்ந்த நீரைக் குடிக்கமாட்டா என்று கவிகள் கூறுகின்றனர்.

2. கர்ஜதி சரதி ந வர்ஷதி வர்ஷதி வர்ஷாஸு நிஸ்ஸ்வனோ மேக: | நீசோ வததி ந குருதே ந வததி ஸுஜந: கரோத்யேவ — சரத்காலத்து மேகம் பெருமுழக்கங்கொள்ளுமேயன்றித் தண்ணீரைப் பொழியாது: மாரிகாலத்திலோ முழக்கமின்றியே நன்கு நீரைச் சொரியும்; அங்ஙனமே கீழ்மக்கள் வாயால் பெரிதும் பெருமை கூறுவரேயன்றி உதவி செய்யார்கள்; மேன்மக்களோ மௌனமாயிருந்தவண்ணம் பேருதவியைச் செய்து முடிப்பர்; என்று இதற்கேற்ற நீதிவாக்கியமொன்றுண்டு.

3. அம்புதம் = (தண்ணீரைக்கொடுக்கும்)மேகம்; இஃது தாபத்தால் வருந்துபவரைத் தண்ணீரளித்துக் குளிரச் செய்யுமியல்புடையதாதலால் (ஆச்வாஸம் 1. பத்தியம் 7. பார்க்க) மன்மததாபத்தினால் தவிக்கும் யக்ஷனுக்கு நன்மை செய்து அவனைக் குளிரச் செய்யக் கூடியதென, இதனால் குறிக்கப்படுகிறது.

4. புஷ்கலாவர்த்தமென்கிற புகழ்பெற்ற வம்சத்திற் பிறந்ததும், தேவேந்திரனுடைய அதிகாரபுருடனானதும், இஷ்டப்படி பல ரூபங்களையெடுத்துக்கொள்ளும் பிரபாவமுடை

ணத்தினாலே நீ செய்துவிட்டு, மாரிகாலத்திற்கேற்ப மனோஹரமான சீர்மைகளை மிகுதியாகப் பெற்று[1] மனமுவந்த தேயங்களிலெல்லாம் ஸஞ்சரிப்பாயாக; ஆனால், யான் மனைவியை விட்டுப் பிரிந்திருப்பது போல், நின்றனக்கும் மின்னொளியை[2] விட்டுப் பிரியும் நிலைமை நொடிப் பொழுதும் நேரிடாமலிருக்கவேண்டும்.[3] 46—47.”

முற்றிற்று.

யதுமான இவ்வித மேகத்தைத் தூது விடுவதென்னும் எளிய காரியத்தைச் செய்ய ஏவுவது அனுசிதமாம்; ஆகையால், ‘என திடம் நேசப்பான்மையினால்’ என்று அதற்குப் பரிஹாரம் கூறுகிறான்.

1. நாரைகளால் அனுஸரிக்கப்படுவது (ஆ. 1. பத் 9.), இந்திரதனுஸ்ஸைப் பெறுதல் (ஆ. 1. பத 15.), மயில்கள் நர்த்தனமாடுதல் (ஆ. 1. பத்•22.), அன்னப்பறவைகள் அனுஸரித்தல் (ஆ. 1. பத் 11.) மின்னலால் பிரகாசித்தல் முதலிய சீர்மைகளைப் பெற்று; எனக் கருத்து.

2. மின்னலை மேகத்துக்கு மனைவியாகக் கவிகள் வர்ணிப்பது முறையென முன்பே மொழியப்பட்டிருக்கிறது.

3. யக்ஷன் மேகத்தைநோக்கி மொழியும் பாவனையாய், மஹாகவியானவன் கிரந்தத்தின் முடிவில் அதைப் படிப்பவருக்கும் இதனால் ஆசிகூறினனென்க.

அனுபந்தம் 1.

[வல்லபதேவன், பூர்ணஸரஸ்வதி முதலியவர்களால் மேகஸந்தேசத்தைச் சேர்ந்தவையல்லவென்று விடப்பெற்றவையும், இடையில் சேர்க்கப்பட்டவையானாலும் உரை யெழுதுவதாக மல்லிநாதனால் கூறப்படுபவையும், நேமிதூதகாவியத்தில் எடுத்துரைக்கப்பட்டனவுமான ச்லோகங்களுக்கு மொழி பெயர்ப்பு.]

முதல் ஆச்வாஸத்தில்

(18, 19, இப் பத்தியங்களுக்கு இடையில் படிக்கவேண்டியது.)

* ஓ நீர்கொண்ட மேகமே! அவ்வாம்ரகூடபர்வதமானது, வழியிற் களைப்புற்று அதற்கெதிர்முகமாகச் சென்ற உன்றனை, தனது உன்னதமான முடியினால் போற்றிக்கொண்டே தாங்கப் போகின்றது; நீயும் அவ்விடத்து அடவியிலுண்டாகும் கோடைகாலத் தணலை மழையைப் பொழிந்து அவித்துவிடக் கடவாய்; நல்லெண்ணத்துடன் மனங்கசிந்து மஹான்களுக்குச் செய்த உதவியானது உடனே நற்பயனளிக்கக் கூடியதன்றோ? [1]

---

* இக்குறி நேமிதூதகாவியத்தில் எடுக்கப்பட்ட ச்லோகங்களைக் குறிக்கும். ‡ இக்குறி மல்லிநாதனால் வியாக்கியானம் செய்யப்பட்ட ச்லோகங்களைக் குறிக்கும்.

1. வடமொழியில் இதைச் சார்ந்த பத்தியத்தை, நிர்ணயஸாகரபிரஸ்ஸில் அச்சிட்ட மேகஸந்தேசத்தில் 15 வது பக்கத்துக் கீழ்வரிசையிற் காண்க. [மல்லிநாதனால் வியாக்கியானம்

(21, 22 வது பத்தியங்களுக்கு இடையில்)

* ‡ ஸித்தகணங்கள், வானத்திலேயே நீர்த்துளிகளை யேந்திப் பருகுவதிற் சாதுரியம் வாய்ந்த சாதக பக்ஷிகளைக் கண்ணோக்கிக்கொண்டும், பந்தி பந்தியாகப் பறந்தோடும் நாரையென்னும் பறவைகளை ஒருவரோடொருவர் எண்ணி யெண்ணிப் பார்வையிடச் செய்து கொண்டு மிருக்குங்கால், திடீரென நீ பெரு முழக்கங் கொள்ள, அது கேட்டு அன்பார்ந்த நாயிகைகள் அங்கம் நடுங்கப் பரபரப்புடன் தம்மை ஆலிங்கனம் செய்து கொள்ளும் ஆனந்தத்தை யடைந்தவராய், நின்றனைக் கொண்டாடப் போகின்றனர்.

(31, 32 வது பத்தியங்களுக்கிடையிலுள்ள 3 ச்லோகங்கள்.)

* ‡ அந் நகரத்துக் கடைவீதிகளில் வரிசையாக வைக்கப் பெற்றிருக்கும் பெருமணிகளை நடுநாயக மாகப் பெற்ற நிர்மலமான ஹாரங்களையும், முத்துச் சிப்பிகளையும், மேன்மையான சங்குகளையும், இளம்புற் களைப்போல் பசுமை நிறங்கொண்டு மேலோங்கி விளங் கும் கதிரொளிகளையுடைய மரகதமணிகளையும் கோடிக் கணக்காகக் கண்ணுறுங்கால், கடல்களனைத்திலும் தண்ணீரொன்று தான் மிஞ்சியிருக்குமெனக் கருதப் படுமாம். [1]

செய்யப்பட்ட ப்ரக்ஷிப்தமான பத்தியங்கள் நிர்ணயஸாகர புஸ்தகத்திலும், தெலுங்கு முதலிய வேறு லிபிகளிலுள்ள அனேக புஸ்தகங்களிலும் காணப்படும்.]

1. ஸமுத்திரத்தில் நல்முத்து முதலியவை யுற்பத்தியாவதால், அதை ரத்நாகரம என்று கூறுவர்; இங்கு கடைவீதியில் அளவிறந்த இரத்தினக்குவியல்களைப் பார்த்தால்

* ‡ அவ்விடத்திய விசேஷ வரலாறுகளறிந்த நகரத்து ஜனங்கள், "வத்ஸராஜன் ப்ரத்யோதனது ப்ரியமகளை இவ்விடத்தில் அபஹரித்தனன்; அவ்வரசனுக்கே இவ்விடத்திற் பொன்மயமான பனங்காடொன்று இருந்தது; இங்கு நளகிரி யென்கிற மத்த கஜமொன்று பெருந் தூணைப் பெயர்த்துக்கொண்டு ஓடித் திரிந்தது" எனக் கூறி, வெளியூர்களிலிருந்து வரும் தமது உறவினர்களைக் களிக்கச் செய்கின்றனர்.

* ‡ ஆங்குள்ள அச்வங்கள், பச்சிலையைப் போல் பசுமை நிறங்கொண்டு, கதிரவனது குதிரைகளிடம் பொறாமையுடன் அவற்றை வெல்லக்கூடியன; கஜங்களோ, மதங்கொண்டவையாய் சின்றனக்கேற்ப மத நீராகும் மழையைச் சொரிந்துகொண்டு மலைகளைப் போல் மிகவுமுயர்ந்திருக்கும்; போர்வீரர்களோ, யுத்தங்களில் வாள்கள் தாக்கியதாலுண்டான விரணக் குறிகளை யலங்காரமாகப் பெற்று வேறு ஆபரணங்களாலுண்டாகும் பொலிவைப் புறக்கணித்தவராய் இரணகளத்தின்கண் இராவணனையும் எதிர்த்து நின்றுப் போர் புரிய வல்லவர்.

இரண்டாம் ஆச்வாஸத்தில்

(2, 3 வது ச்லோகங்களுக்கு இடையிலுள்ள 2 பத்தியங்கள்.)

* ‡ அவ்வளகையின்கண், மரங்கள், என்றைக்

லமுத்திரத்தில் நல்முத்து முதலிய இரத்தினங்களெல்லாம் செலுவழிந்து, கேவலம் நீர் நிரம்பிய கடலாக இருப்பதாக மட்டும் நினைக்கப்படுமாம்.

கும் மலர்களால் நிறைந்தவைகளாய், நன்கு மதங்கொண்டு சப்திக்கும் வண்டுகளுடன் கூடியிருக்கின்றன; தாமரை யோடைகள், எப்பொழுதும் கமலமலர்களைப் பெற்று, அன்னப்பறவைகளின் பந்திகளால் சூழப்பெற்றுள்ளன; அகத்திலுள்ள மயில்கள் எக்காலமும் விரிவான தோகைகளுடன் விளங்கியவையாய் அகவல் பாட ஆவல் கொண்டுள; அந்திப்பொழுதுகள் என்றைக்கும் நிலவினால் விளங்கி, இருள் பரவுவதைப் போக்கி மிகவுமழகாய் பிரகாசிக்கின்றன.

* ‡ ஆங்கு, செல்வஞ் செழித்த அவ்வியக்கருக்கு ஆனந்தத்தால் கண்ணீருண்டாவதேயன்றி, வேறெக் காரணங்களாலுமன்று; மனதுக்கினிய மனைவி அல்லது மணாளரது சேர்க்கையினாலேயே போக்கக் கூடிய மன்மததாபமின்றி, மற்றொரு தாபமும் கிடையாது; மிகவு மன்புடன் போலிக்கலஹத்தினால் பிரிவுறுவதைத் தவிர்த்து வேறெவ்விதப் பிரியும் தம்பதிகளுக் கேற்படுவதில்லை; யௌவனப்பருவமன்றி, பிறிதோர் வயதும் அவர்களுக்குக் கிடையாது.

(3, 4 வது பத்தியங்களுக்கு இடையில்)

* ‡ அவ்விடத்தில், அமரரால் விரும்பத் தகும் அழகு பொருந்திய கன்னிகைகள், கங்கையின் நீர்களால் குளிர்ச்சியான மாருதங்கள் மேனியின்மீது மெல்லென வீச, அவ்வாற்றங்கரையில் முளைத்த கற்பக விருக்ஷங்களின் நிழலால் வெப்பம் நீங்கியவராய், கனகமயமான மணற்குவியல்களில் இரத்தனங்களை மறைத்து

வைத்துத் தேடிய வண்ணம் விளையாடிக்கொண்டிருப்பர்.[1]

(6, 7, வது பத்தியங்களுக்கு இடையிலுள்ள 3 ச்லோகங்கள்)

* ‡ அவ்வளகையில், அகங்களுக்குள் என்றைக்கு மழிவுறு நிலைமையிலுள்ள நிதிகளைப் பெற்றவரான காமுகிகள், தேவதாஸிகளான அப்ஸரஸ்திரீகளைத் துணையாகக்கொண்டு, செல்வத்திற்கதிபதியான குபேரனது புகழை இனிய தொனியுடன் கணீரெனப் பாடும் கின்னரருடன் கூடியவராய், வெளிப்புறத்திலுள்ள வைப்ராஜமென்னும் உத்தியானவனத்தின்கண்[2] ஒருவருக்கொருவர் ஸல்லாபம் செய்துகொண்டு இன்பமனுபவிக்கின்றனர்.

* ‡ அந் நகரத்தினில், சிற்றின்பத்திற் பற்றுள்ள வனிதைகள் தமது ஆசைநாயகரிருக்குமிடம் சென்று வந்த வழியானது, அவர்கள் நடக்குங்கால் சிறிது உடல் நடுங்க அதனல் கூந்தல்களிலிருந்து வீழ்ந்த மந்தாரமலர்களாலும், அவரது செவிகளிலிருந்து நழுவிய கமலமலர்களென்ன தளிர்களின் துண்டுகளென்ன இவற்றாலும், ஸ்தனங்களுக்கருகில் அறுபட்ட ஹாரங்களிலிருந்து இறைந்த முத்துகளா

1. சிறுவர், சிறு குச்சிகளை மணற் குவியல்களில் மறைத்து வைத்துத் தேடும் விளையாட்டுக் கிராமங்களில் இப்பொழுதுமுண்டு; இவ்விதமே குப்தமணி (மணியை மறைத்துத் தேடும்) என்கிற ஆட்டமும் என்றறிக.

2. சிவனது பிரமதகணத்தில் ஓர் அதிகாரியான விப்ராஜன் என்பவனல் காக்கப்படும் உத்தியானவனம் வைப்ராஜம் எனப் படும்; என்ற சம்புரஹஸ்யம்.

னும் ஸூரியோதயவேளைகளில் அறிவிக்கப்படுகின்றது.[1]

* ‡ ஆங்கு, பலவர்ணமுள்ள ஆடைகளென்ன, நேத்திரங்களுக்குப் புருவ நெறிப்பு முதலிய விலாஸங்களை யுபதேசிக்கும் வல்லமை வாய்ந்த மதுவென்ன, தளிர்களுடன் மலர்ந்தெழும் அழகிய மலர்களென்ன, பற்பல வகையான ஆபரணங்களென்ன, பாதாரவிந்தங்களிற் பூசுவதற்கேற்ற செம்பஞ்சுக் குழம்பென்ன— இவ்விதமான ஆடவருக்கு அழகளிக்கும் அலங்காரங்கள் அனைத்தையும் கற்பகவிருக்ஷமொன்றே உண்டாக்குகின்றது.

(38, 39 வது பத்தியங்களுக்கு இடையில்)

*வாலிபப் பருவத்தைப் பெற்று அழகாய் விளங்கும் அருமை நாயகியே! மெல்லிய மழைத்துளிகளால் நனைந்த மேதினியைப் போல் நறுமணம் கமழும் நினது முகத்தைக் காணுமல், நெடுந்தூரத்திலிருந்து மிகவும் இளைத்திருக்கும் என்றனை இன்னும் இம் மன்மதன் வருத்திச் சிதைக்கின்றானே! மேலும், இம் மாரிகாலத்தினில், திசைகள் தோறும் நெருங்கிப் பரவிய கார் முகில்களால் மறைவுற்ற ஸூரியகிரணங்களையுடைய இந் நாட்களை நான் எங்ஙனம் கழித்திடுவேன்?[2]

---

1. அந் நகரத்தினில்...என்கிற இவ் வாக்கியத்திற்கு ஆதாரமான ச்லோகத்துக்கு வல்லபதேவனாலும் வியாக்கியானம் வரையப்பட்டிருக்கிறது.

2. வடமொழியில் இதற்காதாரமான ச்லோகத்தை நிர்ணயஸாகர—மேகஸந்தேசத்தில் 79 வது பக்கத்தின் கீழ் வரிசையிற் காண்க.

(45, 46 வது பத்தியங்களுக்கிடையில்)

* ‡ அப்பா! முதல் விரஹத்தினால் மிகத் துயரமுறும் நினது தோழியை இங்ஙனம் தேற்றிய பின், முக்கண்ணனது விருஷபத்தினால் கொந்தி வீழ்த்தப் பெற்ற சிகரத்தையுடைய அப் பர்வதத்தினின்றும் திரும்பி, அறிகுறிகளுடன் கூறியனுப்பிய அவளது க்ஷேமஸமாசாரங்களையுமறிந்து வந்து, காலையில் மலரும் குருக்கத்திமலர்போல் எளிதிற் சிதையுறும் நிலைமையிலுள்ள எனதுயிரையும் நீ நிலை நிறுத்தக் கடவாய்.

(47 வதுக்குப் பிறகு இறுதியிலுள்ள 3 ச்லோகங்கள்[1])

* இஷ்டம் வாய்ந்தவிதம் வடிவமெடுக்கவல்ல அவ்வம்புதமானது, அப்பால், அந்த இராமகிரியிலிருந்து விரைவாக அளகாபுரியடைந்து, அங்ஙனம் அவ்வியக்கனால் வர்ணிக்கப் பெற்ற அவனது மாளிகை, முன் பார்த்ததற்கு மாறாகப் பெரும்பாலும் ஒளிமழுங்கிக் கிடக்கக் கண்டு, அவ்வியக்கன் பெரு முயர்ச்சியுடன் அன்பார்ந்து மொழிந்த செய்தியனைத்தையும் அவனது மனைவியினிடம் கூற முயன்றது.

*மானிடருக்கு நன்மை செய்வதிற் கருத்துள்ளதும், மேலான மஹிமைவாய்ந்ததுமான அம் மேகமானது, அவ்வியக்கன்மனைவியினது உயிரைக் காக்க, வானவருக்கேற்ற வாக்கைக்கொண்டு அவளிடம் அனைத்தையும் உரைத்தது; அவளும், தன் கணவனது

1. இவற்றின் மூலச்லோகங்கள் மூன்றும் நிர்ணயஸாகர புஸ்தகத்தில் 87 வது பக்கத்தில் அடியில் வரிசையாக வரையப்பட்டிருக்கின்றன.

செய்தியறிந்து இன்பமுற்றிருந்தனள்; உத்தமரிடம் செய்துகொண்ட வேண்டுகோள், எவருக்குதான் தாம் விரும்பிய வண்ணம் பயனளிக்காதிருக்கும்?

*குபேரனும், அப்பொழுதே, மேகம் மொழிந்த அச் செய்தியைச் செவியுற்றுச் சினந்தணிந்து மன மிரங்கியவனாய், சாபத்திற்கு முடிவையுமேற்படுத்தி, யக்ஷதம்பதியான அவ்விருவரையும் பிரிவின்றித் துயர மற்று மனங்களித்து அடிக்கடி அளவிறந்த இன்பங் களனுபவித்தவண்ணம் இருக்கச் செய்தனன்.

அநுபந்தம் 2.

யக்ஷின் மேகத்திற்குக் கூறிய பாதைகளிலுள்ள பர்வதம், நதிகள், நகரங்கள் முதலியவற்றைப் பற்றிய விவரங்கள்.

[பண்டைக்காலத்தில் வழக்கிய அடியிற் கூறப்படும் பிரதேசங்களின் பெயர்களும், அவற்றினுருவங்களும் பெரும்பாலும் பலவாறு மாறி யிருக்கின்றனவாதலால், காளிதாஸனுரைத்துள்ள ஒவ்வோரிடமும் இதுதான் என்று நிச்சயமாகக் குறிப்பிடுவது மிகவும் கஷ்டஸாத்தியமென்றாலும், அனேக ஆராய்ச்சிகளால் அவற்றைப்பற்றிய விவரங்கள் இங்கு குறிக்கப்படுகின்றன.]

அவந்தீ:—நர்மதாநதிக்கு வடக்கிலும், அரவல்லி மலைக்குத் (திரிகூடமென்றும்சிலர் இதைக்கூறுவர்) தெற்கிலுமுள்ள ஓர் தேசம்; இதற்கு உஜ்ஜயினீ இராஜதானியாயிருந்தது. இது அவந்திபுரீ அல்லது விசாலா என்றும் கூறப் படும். இத் தேசத்திற்கருகில் சிப்ராநதி ஓடுகின்றது. மஹாபாரதகாலத்தில், இத் தேசம் தெற்கில் நர்மதாநதிக்கரைகள் வரையிலும், மேற்கில் மஹி (Mahi) என்கிற நதியின் தீரங்களளவும் பரவியிருந்தது. நன்கு நிதானித்து நோக்குங்கால் மாளவபீட பூமியின் மேற்குப் பகுதியே (Western Part of the Malwa Plateau) இத் தேசமென்றறியப்படுகின்றது.

அளகாபுரீ:—இஃது யக்ஷேச்வரனை குபேரனுக்கு

இராஜதானி யென்றும், கைலாஸகிரியின்மீது இருப்ப தாகவும் காவியங்களிலும் புராணங்களிலும் கூறப்படு கின்றது. இப்பொழுது இமயமலையிற் கைலாஸ மென்று சொல்லப்படுகிறவிடத்திற் சிற்றாறு ஒன்று உற்பத்தியாய்,கங்கைக்கு முதல் உபநதியாக அத்துடன் சேருகின்றது ; அதற்கு அளகநந்தை யெனப் பெயர். அந்த உற்பத்தியாகுமிடமோ, அதன் ஸமீப பிரதேச மோ அளகையாயிருக்கவேண்டும்; அளகை தேவர் வஸிக்குமிடமாதலால் நமக்குப் புலப்படவில்லை யெனக் கூறலாம.

ஆம்ரகூடம்:—மாமரங்களை அடர்த்தியாகப் பெற் றதால் இம் மலைக்கு 'ஆம்ரகூடம்' என்று பெயர் வந் தது. நர்மதாநதிக்கு ஸமீபத்திலுள்ள இக் குன்று இப் பொழுது அமர்கண்டக் (Amarkantak) என்று ஸாதாரணமாய் வழங்கப் பெற்றுவருகின்றது. இக் குன்றுக்குத் தெற்கில் ஓர் உயர்ந்த பூமியில் மஹாநதீ என்கிற பிரஸித்தமான ஆறு உற்பத்தியாகின்றது.

இமயமலை:—இப்பாரததேசத்திற்கு வடக்கெல்லை யாகவும், பனிக்குஇருப்பிடமாகவும், ஆகாயத்தைஅளா வியதாய் உலகிலுள்ள பர்வதங்களுக்குள் மிகவும் உன் னதமுமான இம் மாமலை மிகப் பிரஸித்தமானது.

இராமகிரி:—ஸ்ரீராமன் வனவாஸம் செய்கையில் அவர் தங்கியிருந்த எந்த மலைக்கும் இப் பெயர் வழங்க லாம். ஆனால் சித்திரகூடபர்வதமே அவற்றுள் மிகவும் புகழ் பெற்றது ; ஏனெனில் அவர் கானகமேகியதும் முதலிற் சித்திரகூடத்தில்தான் வாஸம் செய்தனர்.

சித்திரகூடமென்பது, இப்பொழுது மத்திய இந்தியா வில் (Central India), பண்டல்கண்ட் (Bundel khund) என்னுமிடத்தில் காம்ப்டா (Comptah) என்பதாகக் கூறப்படுகின்றதாம். இவ்விடம் இன் னைக்கும் புண்ணிய க்ஷேத்திரமென்று கருதப்பெற்று வருகின்றது. பிறகு கூறப்படும் மார்க்கங்களிலுள்ள இடங்களை ஆலோசித்தால், சித்திரகூடந்தான் இங்கு இராமகிரியெனப் படுவதாக நினைக்க முடியாது; பிறகு வர்ணிக்கப்படும் பிரதேசங்கள் சில சித்திரகூடத்திற் குத் (Comptah) தெற்கே யிருக்கின்றன. ஆகையால் நாகப்பூருக்கு (Nagpur) அருகிலுள்ள கைமூர் என் கிற பிரதேசத்தின் (Kaimur Range) ஓர் பகுதியான இராம்டேக் (Ramtek) என்று இப்பொழுது வழங்கப் படும் குன்றமே இராமகிரியெனக் கருதவேண்டி யிருக் கின்றது. இவ்விடம் நாகப்பூருக்குச் சிறிது வடக்கி லுள்ளது. ஸ்ரீராமன், ஸீதையுடனும் இலக்ஷ்மண னுடனும் தென்தேசத்தைநோக்கிச் செல்லுங்கால், இராம்டேக் (இராமகிரி) என்கிற அக் குன்றிற் சிறிது காலம் தங்கியிருந்ததாகக் கூறி, அவ்விடத்தியவர், ஸ்ரீராமன் முதலியவர்களுக்கு இப்பொழுதும் அங்கு உத்ஸவாதிகளை நடத்திவருகின்றனராம்.

உஜ்ஜயினீ:—இதற்கு விசாலா என்று மற்றொரு பெயருண்டு. இந் நகரம் பண்டைக் காலமுதல் இது காறும் புண்ணிய க்ஷேத்திரமென்று வெகு புகழ்பெற் றிருக்கின்றது. இது அவந்திதேசத்திற்கு முக்கிய பட்டணமென்று மொழியப்பட்டிருப்பினும், மாளவ தேசத்திற்கு இராஜதானியாயிருந்ததென்றும் கூறப்

படுகிறது. இதற்குக் காரணம், மாளவதேசம் மிக விரிந்து அவந்தியை முக்காற் பங்குச் சூழ்ந்திருந்ததால், அவந்தியின் பெயர் மறைவுற்று மாளவமே பலவகையில் முதன்மை பெற்று, உஜ்ஜயினியும் அதற்கே இராஜதானியென்ற வழங்கப்பட்டது போலும். முன்னால் இந்து விக்கிரமாதித்தியன் முதலியவர்களால் ஆளப்பெற்று வந்தது. மஹாராஜாஹோல்காருக்கு முக்கிய வாஸஸ்தலமான இந்தூர் (Indore) என்கிற நகரத்திற்கு வடக்கில் இப்பொழுதும் உஜ்ஜயினீ (Ujjain) என்னும் அதே பெயருடன் விளங்குகின்றது.

கங்காநதீ:—இமயமலையின் தென் சாரலில், கார்வால் ரேஞ்ஜ் (Gharwal Range) என்னும் பிரதேசத்தில், பனிக்கட்டிக்குவியல்களைப் பெற்ற கங்காத்வாரம் அல்லது கங்கோத்ரி (Gangodri-Glacier) என்கிற இடத்திற் கிளம்பி, அளகநந்தை யென்னும் உபநதியுடன் முதலிற் கலந்து, இமாலயத்தை விட்டு வெளி வந்து, ஹரித்வாரம் வழியாகத் தென்திசை நோக்கி வெகு செழிப்பான ஸமவெளிகளில் வீழ்ந்துச் சென்று, அங்கிருந்து சிறுகச் சிறுகக் கிழக்காகத் திரும்பி, இராஜமஹால் குன்றுகளைச் (Rajmahal hills) சுற்றிக்கொண்டு, பிரயாகை (Allahabad) முதலியவிடங்களில் யமுனை, சோணம் முதலான பல நதிகளை உபநதிகளாகப் பெற்று, இறுதியிற் பிரம்மபுத்திரா என்னும் மஹாநதியுடன் கூடி, மஹோததியென்னும் வங்காளவிரிகுடாவில் விழும் இது மஹாபுண்ணியநதி யென்று நமது தேசத்தில் மிகவும் புகழ் பெற்றுளது.

கந்தவதீ:—உஜ்ஜயினிக்கு அருகிலுள்ள ஒரு சிறு காட்டாறு. இப்பொழுது, பார்வதீ (Parbati) என்கிற ஆற்றுக்குக் கிழக்கில் குன் (Kunn) என்று வழங்கப்படுவதும், அதற்குமேற்கில் கலிஸிந்து(Kali-Sindh) எனக்கூறப் படுவதுமான சிற்றாறுகளோ, அல்லது அவற்றிற்கு அருகிலிருக்கும் வேறு ஏதேனும் காட்டாறோ இவ்விதம் கந்தவதியெனப் படுவதாக ஊஹிக்க வேண்டியிருக்கின்றது.

கம்பீரா:—விந்தியமலையின் வடபாரிசத்திலுண்டாய், வடதிசைநோக்கி ஓடி யமுனையுடன் சேரும் கென் (Ken) என்று இப்பொழுது வழங்கப்படும் நதியெனத் தோற்றுகிறது.

கனகலம்:—ஹரித்வாரத்திற்கு வடக்கில், கங்காநதி இடாலயத்தைவிட்டுக் கீழிறங்குமிடத்திலுள்ள ஒரு பிரதேசம்; அங்குள்ள ஒரு தீர்த்தத்திற்கும் கனகலம் எனப் பெயராம். ஸேவாலிகாமலைத் தொடருக்குத் (SewalikaMountains) தெற்கில் இப் பெயர் கொண்ட ஒரு கிராமமு முண்டு. எந்த மூடன்தான் இந்த தீர்த்தத்தில் நீராடி முத்திபெறமாட்டான் (கல: கோ நாம முக்திம் வை பஜேத நாத்ர மஜ்ஜநாத்। அத: கநகலம் தீர்த்தம நாமநா சக்ரு முநீச்வரா:) என்று கூறி, முனிவர் இதற்குக் 'கனகலம்' எனப் பெயரிட்டதாக, கங்காத்வாரமாஹாத்மியத்தில் மொழியப்பட்டிருக்கின்றது.

கிரௌஞ்சபர்வதம்:—பூதன் (Bhutan) என்கிற ஓர் இராஜ்யத்திற்கும் (நேபாளத்தைப்போல் அதை

விடச் சிறிது குறுகிய ஸ்வதந்திரம் பெற்ற இராஜ்யம்), நேபாளத்திற்கும் இடையிலுள்ள ஸிக்கிம் (Sikkim) என்கிற பர்வதப்ராந்தத்தின் ஒரு பகுதியான கஞ்சஞ்ஜங்க (Kanchanjang) என்னும் குன்றமாயிருக்க வேண்டும்; இமாலயத்தில் மஹா உன்னதமான தெனக் கூறப்படும் மௌண்ட் எவரெஸ்ட் (Mt. Everest) என்கிற சிகரத்திற்குச் சிறிது கிழக்கில் அமைந்தவிடச் சற்றுச் சிறியதான இதன் சிகரம் வெகு விசாலமாயும் கம்பீரமாயுமிருக்கும். இங்கிருக்கும் ஒரு கணவாயினூடே இமாலயத்தைக் கடந்து, திபேத் நாட்டிற்கு ஜனங்கள் வியாபாரத்தின் பொருட்டுப் போய் வருகின்றனர். ஸுப்பிரமணியன், கிரௌஞ்சன் என்கிற அஸுரனை இவ்விடத்தில் வதை செய்ததால் இம் மலைக்கும் கிரௌஞ்சமென்ற பெயரிடப் பெற்றது என்று மிருகேந்த்ரஸம்ஹிதையிற் கூறப்படுகிறது.

குருக்ஷேத்திரம்:—சந்திரவம்சத்திற் பிறந்து அருந்தவம் புரிந்த குரு என்னும் மன்னன் ஆண்டதால் இப்புண்ணியபூமிக்கு குருக்ஷேத்திரமெனப் பெயர் வந்தது. இவ்விடத்திற் பரசுராமன், க்ஷத்திரியர்களை 21 தலைமுறையளவும் தனது கோடரிக்கு இரையாக்கி, அவ்வரசரது இரத்தங்களால் ஸமந்தபஞ்சகம் என்கிற ஐந்து மடுக்களை யுண்டாக்கினரென்றும், அது முதல் இந்த க்ஷேத்திரம் ஸமந்தபஞ்சகம் எனப் படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ்விடத்திற் போர் செய்து மாண்டுபோகும் க்ஷத்திரியருக்கு மோக்ஷம் கிடைக்கின்றதாம். ஆகையினாற்றான் குருபாண்டவர் இங்கு மஹத்தான பாரதயுத்தத்தை நடத்தினர்.

களாம். இந்த டெல்லிக்கு அருகில், தனேச்வர (Thanesar) என்கிற ஊருக்குச் சிறிது தென் கிழக்கில் இப் பொழுதும் இப் பெயருடனே விளங்குகின்றது. இது மிகவும் புண்ணியக்ஷேத்திரமென்று நமது தேசத்தில் இன்றைக்கும் அனைவராலும் கருதப்பெற்று பிரஸித்தமாயிருக்கின்றது.

கைலாஸபர்வதம்:—இந்த இமாலயத்தின் பின்புறத்திலுற்பத்தியாகும், ஸிந்துமஹாநதிக்கு (River Indus) வடகரையிலிருந்து, காச்மீரநாட்டைக் குறுக்காகக் கடந்து, வடமேற்கிலிருந்து தென்கிழக்காக நீண்டிருக்கின்றது. இந்த மலையைக் குபேரனுக்கும் முக்கியமாய சிவபெருமானுக்கும் பிரதானவாஸஸ்தலமென்று நமது தேயத்தார் கருதுகின்றனர். இந்த மலையின் சாரிலிருந்தே பிரம்மபுத்திரா என்னும் மஹாநதி உற்பத்தியாகின்றது. இதற்கு இப்பொழுதும் கைலாஸம் அல்லது காங்கரிமலைத்தொடர் (Kailas or gangri mountains) எனப் பெயர் வழங்கப்படுகிறது.

சர்மண்வதீநதி:—இந் நதி விந்தியபர்வதத்தின் வடபாரிசத்திலுற்பத்தியாய், முதலில் மாளவதேச பீடபூமியின்மீது (Malwaplateau) நேர் வடக்காகவும் பிறகு சிறிது வடகிழக்காகவும் திரும்பி, இராஜபுதன நாட்டின் கிழக்கு முனையில் மத்தியஇந்தியாவுக்கு மேற்கெல்லையாக ஓடி, கான்பூருக்குச் சிறிது வடமேற்கில் யமுனைக்கு உபநதியாக அத்துடன் கூடுகின்றது. சிப்ரா, பார்வதீ (Parbati), கலிஸிந்து முதலிய பல

சிற்றாறுகள் சர்மண்வதிக்கு உபநதிகளாயிருக்கின்றன. இப்பொழுது இந் நதி சம்பல் (River chambal) என்று வழங்கப்படுகிறது.

சிப்ராநதீ:—இந்தோர சிற்றாறு; விந்தியமலையின் வடசாரலில், சர்மண்வதியுண்டாகும் இடத்திற்குச் சிறிது கீழ்த் திசையில் உற்பத்தியாய் வடக்காக ஓடி, சர்மண்வதியுடன் கூடுகின்றது. இதன் கரையில்தான் உஜ்ஜயினீநகரம் இருக்கின்றது.

தசபுரம்:—இது மாளவதேசத்திற்கு வடக்கில், இராஜபுதனநாட்டிற்கு நேர் கிழக்கில், சர்மண்வதீநதி இராஜபுதனநாட்டை விட்டு விலகுமிடத்தில் அந் நதிக் கரையில் இருந்ததாகத் தெரியவருகிறது; இப்பொழுது ஆங்கு தோள்பூர் (Dholpur) என்று வழங்கப் படும் ஜாட்ஸம்ஸ்தானத்தின் (Jat state) முக்கிய நகரமே தசபுரமாயிருக்குமெனக் கருதப்படுகிறது. முன்னால் தசபுரம் இரந்திதேவனுக்கு இராஜதானியா யிருந்தது. ஆகையால் இரதன்பூர் (Rutanpur) என்று இப்பொழுது வழங்கப்படும் ஊரே தசபுரமா யிருக்கக் கூடுமென்று வில்ஸன்துரை கூறுகிறார்.

தசார்ணம்:—முற்காலத்தில் இந்து ஒரு தேசத் தின் பெயரா யிருந்தது. இவ்விடம் இப்பொழுது மா ளவதேசத்திற்குக் கிழக்கிலிருப்பதாகத் தெரியவரு கிறது. இந்து இப்பொழுது மத்தியமாகாணத்தில் (Central provinces), சடிஸ்கார் (Chhatisgarh) என்கிற ஸமவெளிப் பிரதேசமா யிருக்கவேண்டும். முன்பு இதற்கு விதிசாநகரம் இராஜதானியாயிருந்தது.

இத் தேசம் விந்தியத்திற்குச் சிறிது கிழக்கிலுள்ள தென்று ப்ருஹத்ஸம்ஹிதையென்னும் கிரந்தத்திற் கூறப்படுகின்றது. தசார்ணதேசத்தின் மேற்குப் பகுதியில் தசார்ணம் என்கிற ஒரு நதியுமுண்டு. இப்பொழுது யமுனையாற்றுக்கு உபநதியாயிருக்கும் தசன (Dasan) என்பதே 'தசார்ணநதியெனத் தோற்றுகிறது.

தேவகிரி:—மாளவதேசத்திற்கு மத்தியில், சர்மண்வதீநதிக்குத் தெற்கிலுள்ள ஒரு குன்று; இப்பொழுது இம மலை தேவகர் (Dewagar) என்று வழங்கப்படுகிறதாம், இங்கு சுப்பிரமணிய தேவாலயம் ஒன்றுண்டு; இன்றைக்கும இக் தேவாலயம் சிறப்புற்றிருக்கின்றதாம்.

நர்மதாநதீ.—விந்தியத்திற்கு அருகில் ஆம்ரகூடத்தின் சாரலில் (Amarkantakrange) உற்பத்தியாய், விந்தியபர்வதத்திற்கும் சதபுரமலைத் தொடருக்கும் (Satpura hills) இடையிலுள்ள பெரிய படுகை நிலத்தினூடே நேராய் மேற்காக ஓடி, அரபிக்கடலென்னும் மேற்கு ஸமுத்திரத்திற் கலக்கும் இந் நதி இத் தேசத்தில் புண்ணியநதி யென்று மிகப் பிரஸித்தி பெற்றிருக்கின்றது. கிழக்கிலிருந்து மேற்காக ஓடும் இதைப் போன்ற ஆறுகள் 'நதம்' எனப் படுகின்றன. இதற்கு ரேவா என்று மற்றொரு பெயருண்டு. இஃதுண்டாகுமிடத்திற்கு வடக்கில் இப் பெயருடன் (Rewah-ரேவா) ஒருஸம்ஸ்த்தானம் இப்பொழுதுமுண்டு.

நிர்விந்தியாநதீ:—விந்தியமலையிலிருந்து உற்பத்தி

யாகும் ஓர் சிற்ருறு. சர்மண்வதிக்கு உபநதிகளான சிப்ரா, பார்வதி இவற்றிற்கு இடையிலுள்ள ஒரு சிறிய நதியா யிருக்கவேண்டும்.

நீசைர்க்கிரி:—நீசைர்க்கிரி என்ருல் ஓர் சிறுமலை யெனப் பொருள். இது விதிசாநகரத்திற்கு அருகிலுள்ள ஒரு சிறு குன்ருயிருக்கவேண்டும். (இதற்குப் பிறகு 26-வது பத்தியத்திற் கூறப்படும் காட்டாறுகள் என்பவை, சிப்ராநதிக்கும் தசார்ணநதிக்கும் (River Dasan) இடையில் விந்தியத்திலிருந்தோடும் அநேக சிற்ருறுகளைத் தோற்றுகிறது; அவற்றுள் பார்வதீ, கலிஸிநது, கலிபர்வன், விதிசா (River Beas) முதலியவை முக்கியமான சிறுநதிகள்.

பிரம்மாவர்த்தம்:—ஆர்யாவர்த்த (விந்திய இமாலயங்களுக்கு நடுவிலுள்ள) தேசத்தின் கிழெல்லையையுண்டாக்குவதான திருஷத்வதீநதிக்கும், ஸரஸ்வதீ நதிக்கும (இவ்விரண்டும அந்தர்வாஹினிகள்-ஸரஸ்வதீ நதியின் விவரத்தைப் பார்க்க.) இடையிலுள்ள ஓர் பிரதேசம். இவ்விடம் மஹாபரிசுத்தமானதென்றும், இத் தேசத்திலுண்டான ஆர்யர்கள் அநேகசரித்திரஸம்பந்தமான விஷயங்களை வெளியிட்டவரெனவும், இதற்கப்பால் வடக்கில் குருக்ஷேத்திரம், மத்ஸியதேசம், பாஞ்சாலம முதலியவை இருக்கின்றனவென்றும் மனுவும் கூறுகிருர். அதாவது இராஜபுதனநாட்டிலுள்ள பாலைவனம் (Sandy Dessert) எனத் தோற்றுகிறது. அந்த ஸமவெளியில் நீராவது நிழலாவது கிடையாது. அங்கு நதி மலை முதலியவை யில்லாததாற்ருன், அவ்விடத்தில் கிழிறங்காமற் கடந்து

போய்க் குருக்ஷேத்திரம் நோக்கி ஏகுமாறு மேகத்தை நோக்கி யக்ஷன் கூறுகிறானென்க. இவ்விடத்தின் ஒரு பாரிசமே முன்னால் 'நைமிசாரண்ணியம்' என்று வழங்கப்பட்டதென்று சிலரெண்ணுகின்றனர்.

மஹாகாலக்ஷேத்திரம்:—உஜ்ஜயினிக்கு மிகவும் அருகிலுள்ள ஓர் சிறப்புற்ற சிவக்ஷேத்திரம். அங்குள்ள சிவபெருமானுக்கு மஹாகாலன் எனப் பெயராதலால், அவ்வாலயத்திற்கும், க்ஷேத்திரத்திற்கும் கூட மஹாகாலம் என்றே பெயர் வழங்கலாயிற்று. இதற்கு ஸமீபத்தில் கந்தவதீ (பெரும்பாலும் கலிஸிந்து அல்லது கன் என்று தற்காலத்தில் வழங்கப்படும் சிற்றாறுகளில் ஒன்று) என்கிற நதியொன்றுண்டு.

மாலம்:—இம்மேதா மலைப்பிரதேசம். சிறிது மேற்காகச் சென்று உடனே வடக்காகத் திரும்பி ஆம்ரகூடம் போகுமாறு மேகத்திற்கு உபதேசிக்கப்படும் மார்க்கத்தை நோக்குங்கால், வடக்கே மால்டாஜில்லாவுக்கு (MaldaDistrict) சிறிது தெற்கிலுள்ள இரதன்பூருக்குச் (Katunpur) சற்று வடக்கில் அதைச் சார்ந்ததோர் மலைப்பிரதேசமாயிருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது. உன்னதமான பிரதேசம் அல்லது பீடபூமிக்கு மாலம் எனப் பெயராம்.

மானஸஸ்ரஸ்:—இது இமாலயத்தினிடையில் உன்னத பிரதேசத்தில் திபேத்நாட்டிற்கு அருகிலிருக்கின்றது. இப்பொழுதும் இதற்கு மானஸஸரோவரம் (Mana sarowar) என்பதாகவே பெயர்வழங்கப்படுகின்றது. இங்கிருந்து மானஸமென்கிற நதியும் ஒன்று ஓடுகின்றது. மானஸத்திற்கு மிகவும் அருகில்

தான் பிரம்மபுத்திரா என்கிற பெரிய நதி உற்பத்தி யாகின்றது. இக் குளத்திற்கு ஸமீபத்தில் ஹாடகம் என்று (இப்பொழுது லாடாக்-Ladakh-என்று வழங் கப் படுகிறதாம்) பிரஸித்தமான பிரதேசமொன் றுண்டு.

விதிசாநகரம்:—முற்காலததில் தசார்ணம் என்று வழங்கப்பெற்ற தேசததிற்கு இராஜதானியா யிருந்த இந் நகரமே, இப்பொழுது மத்திய இந்தியாவில் பில் ஸா (Bhilsa) என்று கூறப்படுவதாகத் தெரிய வரு கிறது. இது வேத்திரவதீ என்கிற நதிக்கரையில் அமைந்துள்ளது. விதிசைக்கு அருகில் பல கோயில் களும், பௌத்தாலயங்களும் (இவற்றுள் ஸஞ்சிதோப் (Sanchitope) என்கிற பௌத்த ஸ்தலம் பெயர்பெற் றது) இப்பொழுது பிரஸித்தமாயிருக்கின்றன.

விந்தியபர்வதம்:—இப்பொழுது மத்திய இந்தி யாவுக்கு ஒருவாறு தெற்கெல்லையாகவும், டெக்கான் என்கிற தக்ஷிணதேசத்திற்கு வடக்கெல்லையாகவு மமைந்து, கிழக்கு மேற்காக நீண்டிருக்கும் இப் பர் வதம் மிகவும் பிரஸித்தமானது.

வேத்திரவதீநதி:—இது விந்தியமலைத் தொடரின் வட பாரிசத்திலுற்பத்தியாய், அங்கிருந்து வடகிழக் காக 340 மயில்தூரம் ஓடி, மாளவதேசத்தையும், பிர யாகையின் (Allahabad) தென்மேற்கு மூலையையும் குறுக்கிடக் கடந்து, காலபீ (Kalpee) என்கிற பட்ட

ணத்திற்கு ஸமீபத்தில் யமுனையாற்றில் வீழ்கின்றது. இதற்கு இப்பொழுது பீட்வா (River Betwa) எனப் பெயர் வழங்கப்படுகின்றது.

ஸரஸ்வதீநதி:—இது, ஸிந்துமஹாநதியின் (River Indus) உபநதிகளுள் வெகு முக்கியமான சதத்ரு (Sutlej) என்கிற பெரிய நதிக்குக் கீழ்த் திசையாக இமயமலையின் தென் சாரலில் உற்பத்தியாய், தெற்கு நோக்கிக் குருக்ஷேத்திரத்திற்குத்தென்மேற்காயோடி, இராஜபுதனநாட்டிலுள்ள பெரிய மணற்பாங்கான ஸம வெளியில் வற்றிப்போய் முடிவு பெருகின்றது; மாரிகாலம் தவிர்த்து மற்றக் காலங்களில் இப்பொழுது இவ்வாற்றில் நீரிருப்பதில்லை. யமுனைக்கு மேற்கில் கக்கா (Ghaggar) எனகிற மற்றொரு நதியுமுண்டு; இதற்கே முன்னால் திருஷத்வதீ என்று பெயர் இருந்திருக்கவேண்டும்; இதுவும் ஸரஸ்வதியைப் போலவே மணற்பாங்கான பூமியில் மறைந்து விடுகின்றது. ஸரஸ்வதியை இப்பொழுது அந்தர்வாஹிநீ என்று கூறுகின்றனர்.

ஸிந்துநதி:—இஃது, விந்திய பர்வதத்தின் தென் சாரலில் வேத்திரவதிக்கும், பார்வதீநதிக்கும இடையிலுற்பத்தியாய், க்வாலியர் ஸம்ஸ்த்தானத்தைக் கடந்து, குவாரி (Kuwari) என்கிற காட்டருடன் கூடி, சர்மண்வதிக்குக் (River Chambal) கிழக்கில் யமுனையில் வீழ்கின்றது. இங்கு கூறப்படும் ஸிந்துநதியென்பது, இந்தியநாட்டின் வடமேற்கெல்லையிலோடும்

ஸிந்துமஹாநதி (Indus) அல்ல; அந்த மஹாநதி ஸிந்துதேசத்தில் (Sind) இருக்கின்றது; உஜ்ஜயினிக்கு அருகிலிருக்கும் இந்த ஸிந்துநதி வெகு சிறியது. உஜ்ஜயினிக்கும் ஸிந்து தேசத்திற்கும் இடையில் வெகுதூரம் இருப்பதையும் ஆலோசிக்கவேண்டும்.



பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	சுத்தம்
6	6	கணக்கிடுவதற்	கணக்கிடுவதிற்
15	16	நத்க்கு	நதிக்கு
21	8	நாயிகைளின்	நாயிகைகளின்
29	6	சிரத்	சிகரத்
54	18	அழுகையும்	அழகையும்
60	6	வரன்றோ ?	வரன்றோ??
61	13	இந்திரனுஸ	இந்திரதனுஸ
72	16	இலக்ஷமண	இலக்ஷ்மண
74	21	சக்குர்	சக்ரூர்
79	12	சிலுநதிசள்	சிறு நதிகள்.)
,,	24	Dessert	Desert

(நூன்முகத்தில்)

xv	13	டௌ	ஸௌ
,,	15	மிகுதியாகய்	மிகுதியாகப்